


# கிளாலி மகிமையின் சுவடு



கிளாலி புனித யாகப்பர் யாத்திரைஸ்தல புதிய கட்டட திறப்பு விழா

சிறப்பு மலர் - 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாலி புனித யாகப்பர் யாத்திரைஸ்தல

புதிய கட்டட திறப்பு விழா

சிறப்பு மலர்

# *கிளாலி மகிமையின் சுவடு*


வெளியீடு :

புனித யாகப்பர் யாத்திரைஸ்தலம்

கிளாலி


**16.07.2021**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தியாகப்பரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மறைமாவட்ட ஆயர்

**பேரருட்திரு**

**கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**

யாழ்ப்பாணம்

அவர்களின்

# ஆசிச் செய்தி

ஆலயம் கிறிஸ்தவ விசுவாச மக்கள் வாழ்வின் வெளி அடையாளமாகும். அந்த வகையில் கிளாலி வாழ் மக்களின் கத்தோலிக்க விசுவாசத்தை பாதுகாத்து, மக்களை ஆன்மீகப் பாதையிலே வழிநடத்திச்சென்ற புனித யாகப்பரின் பரிந்துரை 410 ஆண்டுகள் கடந்த நிலையில் அந்த மக்களுக்கு தொடர்ந்தும் இறைவனின் ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றதையிட்டு ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

வரலாற்றுச் சிறப்பும், பழமை வாய்ந்ததுமான இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் 1610ம் ஆண்டில் வண. பிறே பெற்றோடீ வெற்றங்கோர் சுவாமியாரவர்கள் புனித யாகப்பரின் பரிந்துரையை வேண்டி ஒரு குருசுக்கோவிலை கட்டினார். பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் இவ் ஆலயம் இடிக்கப்பட்டு, மீண்டும் கட்டப்பட்டு, ஆங்கிலேயர் காலம் தொடக்கம் இந் நாள்வரை பல திருத்த வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அண்மைக்கால யுத்த சூழ்நிலைகளில் பெரும் அழிவை, இடப்பெயர்வுகளை எதிர்கொண்ட போதிலும் எல்லா மக்களுக்கும் அடைக்கலம் கொடுத்த இடமாக இவ் யாத்திரைத்தலம் விளங்குகின்றமை இதன் சிறப்பம்சமாகும். இதன் காரணமாக சிதைவடைந்த இவ் ஆலயம் கைவிடப்பட்டு, புனரமைப்பு செய்ய முடியாத நிலையில் அதன் தேவை கருதி புதிதாக ஓர் ஆலயம் கட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்று காணப்படுகின்றது. இப் புதிய ஆலயம் கட்டுவதற்கு முன் நின்று உழைத்த ஒவ்வொருவரையும், உதவி செய்த அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டி நிற்கின்றேன். இவர்களுக்கு எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் கூறி நிற்கின்றேன்.

தொடருகின்ற ஆண்டுகளிலும் இவ் இறைமக்களுடைய விசுவாசப் பயணம் மென்மேலும் வளரவும், புனித யாகப்பரின் பரிந்துரையும், இறைவனின் அருள் ஆசீர்வாதங்களும் நிறைவாகக் கிடைக்கவும் வாழ்த்தி, ஆசித்து நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,

+ Gnanapragasam
.........................................................................

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்குத்தந்தை

**அருட்பணி ப.இருதயதாஸ்**

மிருசுவில்

அவர்களின்

# ஆசிச் செய்தி

"ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில் அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும். ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்." தி.பா 127:1

கிளாலி புனித யாகப்பர் ஆலயம் பல இடங்களில் உள்ள கத்தோலிக்க மக்களையும், மற்றும் நம்பிக்கை உள்ள மக்களையும் வருடத்துக்கு பல முறை ஒன்று சேர்த்து திருவிழாக்களைக் கொண்டாடுகின்ற கடவுளின் இல்லமாக இருந்தது, இருக்கின்றது, இருக்கப்போகிறது.

"படைகளின் ஆண்டவரே, உமது உறைவிடம் எத்துணை அருமையானது." தி.பா 84:1

நாட்டில் நடந்த பயங்கரப் போர் மக்களையும் ஆலயங்களையும் சுக்குநூறாக்கியது. கிளாலி புனித யாகப்பர் ஆலயமும் பாதிப்புக்குள்ளானதாலும், மக்கள் சிதறிப் போனதாலும் இவ்வாலயம் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது, அவ்விடமும் அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது.

"கடவுளின் கோவில் கைவிடப்பட்டுக் கிடப்பதேன்." நே கே 13:11

என்பதற்கிணங்க, புனித யாகப்பர் மேல் பக்தியுள்ள ஒருசில குடும்பங்கள் வெவ்வேறு நாடுகளுக்கு சிதறிப் போயிருந்தாலும், நாட்டில் சிறிய அமைதி ஏற்பட்ட வேளையில், இறைவன் அந்த இடத்தையும், ஆலயத்தையும் திரும்பத் தந்தார்.

நல்ல மனிதர் நாலுபேர் புதிய ஆலயம் கட்ட பலகஷ்டங்கள், சிரமங்கள் மத்தியில், நேரத்தையும் செலவையும் பார்க்காமல் முன்வந்து பின் பலர் ஒன்று சேர்ந்து செயல்பட்டு இன்று அதற்குரிய காணி சீராக்கப்பட்டு, புதுப்பொலியுடன் ஆலயம் அமைக்கப்பட்டு 410 ஆண்டுகள் நிறைவையும் ஆலயத்திறப்பு விழாவையும் கொண்டாடுகிறது.

"வாழும் கடவுளின் கோவில் நாமே என் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். நானே அவர்களின் கடவுள். அவர்கள் என் மக்கள் என்று கடவுளே சொல்லியிருக்கிறார் அன்றோ!" 2 கொரி 6:16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யாகப்பர் ஆலயம் 410 ஆண்டுகள் நிறைவையும் புதிய ஆலய திறப்புவிழாவையும் நினைவு கூர்ந்து, சிறப்பு நூல் வெளியிடும் வேளையில் பழைய புனித சந்தியோகுமையோர் (யாகப்பர்) அம்மானையையும் புதிய பதிப்பாக அச்சிட்டு, இறுவெட்டும் வெளியிட இருக்கின்றார்கள். இது இறைவனை மகிமைப்படுத்தும் நிகழ்வே.

"ஆண்டவருக்கு புதியதொரு பாடல் பாடுங்கள் ஏனெனில் அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார்." தி.பா 98:1

"ஆண்டவரது இல்லத்துக்குப் போவோம் என்ற அழைப்பை நான் கேட்ட போது அகமகிழ்ந்தேன்." தி.பா 122:1

இப்புதிய புனித யாகப்பர் ஆலயம் கடவுளின் பிரசன்னம் நிறைந்திருக்கும் வீடாக இருக்க வாழ்த்துகின்றேன். ஒன்று கூடும் மக்களின் வேண்டல்கள் நிறைவேற்றப்படும் ஆலயமாக இருக்க வாழ்த்துகின்றேன். இயேசுவின் அருளும் உண்மையும் பொழியப்படும் இல்லமாக இருக்க வாழ்த்துகின்றேன்.

"கிறிஸ்துவின் உறவில் கட்டிடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சிபெற்று, அவரோடு இணைந்து, தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வர வாழ்த்துகின்றேன்." எபே 2:21,22

இருப்பினும்,

"உங்கள் உடல், நீங்கள் கடவுளிடம் இருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என தெரியாதா." 1 கொரி 6:19.

ஆகவே "நீங்களும் உயிருள்ள கற்களாயிருந்து இறைவனின் ஆசிக்குரிய இல்லமாக (ஒவ்வொரு குடும்பமும்) கட்டி எழுப்பப்படுவீர்களாக." 1 பேது. 2:5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருட்பணி. X.W. ஜேம்ஸ்

இயக்குநர், கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய ஆணையம்

யாழ். மறைமாவட்டம்.

அவர்களின்

# ஆசிச் செய்தி

யாழ். மண்ணின் புகழ் பூத்த கிராமங்களிலே கிளாலி தனக்கென தனியான பெருமையைக் கொண்டுள்ளது. பார்க்கும் திசையெங்கும் கண்கவர் ஓவியங்களாய் மனதை வருடிச் செல்லும் அற்புதமான காட்சிகள்.

கடல் வளம் கொண்டு, நில வளமும் நீர் வளமும் ஒருங்கே அமைந்து, தென்னையும் பனையும் நெடிதுயர்ந்து நிற்கும், வயல்வெளியின் மலர்ப் படுக்கையிலே கானம் இசைக்கும் அழகிய பறவையினங்கள். இவற்றை கொஞ்சம் கொஞ்சமாக இரசிக்கும் மனிதர்கள்.

அத்தனை சிறப்புகளுக்குள்ளேயும் ஆலயங்களின் கம்பீரமான தோற்றம் கிறிஸ்தவ நம்பிக்கையின் விதையாகிப் போன உன்னதமான கிராமம்.

வரிசை வரிசையாக புனிதர்களின் சாட்சிய வாழ்வைச் சொல்லும் இனிமையான சகாய மணிகளின் ஓசைகள்.

இவற்றுள் ஒரு புனிதர் மிகவும் (கம்பீரமாக) எடுப்பாக தோற்றமளிப்பார். அவர் தான் புனித சந்தியோகுமையோர்

இயேசுவின் திருத்தூதர்களுக்குள்ளே முதல் வேதசாட்சியானவர். தான் கடற்கரையில் அழைக்கப்பட்டதனால் கடற்கரையிலே கோவில் கொண்டு எழுந்து நிற்கின்றார்.

செபதேயுவின் புதல்வனாகி தனது சகோதரன் யோவானுடன் தனது தந்தையை, வலைகளை, படகை விட்டு விட்டு இயேசுவை பின்பற்றியவர்.

எனது பணிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ள புனித சந்தியோகுமையோரின் ஆலயத்தின் எழுச்சி கண்டு பெருமிதம் கொள்கின்றேன். எங்கள் நம்பிக்கை இன்னும் அழகாக கட்டப்பட விரும்புகின்றேன். உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இறைவனின் இனிமையான நல் ஆசிகள் நிரம்ப வேண்டும். கொடும் வேதனையில் தற்போது உலகம் தவிக்கையில் எம் புனிதர் பரிந்துரைக்க வேண்டுமென விரும்பி, கடவுளின் கருணையும், இரக்கமும் இந்தப் புதிய ஆலயத்தோடும் மக்களோடும் எப்போதும் இருக்க ஆசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளாலி மண்ணின் மைந்தன்

**அருட்பணி.மா.இறேஜிஸ் இராசநாயகம்**

அவர்களின்

# ஆசிச் செய்தி

## கனவொன்று நனவாகி...

நினைத்துப் பார்க்கிறேன்
நானூறு ஆண்டுகள்
நம்ப முடியவில்லை!
என் தாய் மண்ணாம் கிளாலியின்
அருட்காவலனாய் வெண்புரவி அமர்ந்து
கொலு வீற்றிருக்கும் தூய யாகப்பர் ஆலயம்
மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கிறது!

நம்பிக்கை வேரின் உறுதியில் வளர்ந்து
கூட்டுறவு குலையாது நிலைக்க
முன்னோர் விதைத்த மனித மாண்புகளை
கல்வி - கலை - கலாசாரம் - பண்பாடு
மற்று அனைத்து விழுமியங்களையும்
பேரருட் கரத்தால் தாங்கி நடத்திய
புனிதர் எம் யாகப்பரை நன்றியோடு
நினைக்கிறேன்!

நம்மவரை அணைத்து நடந்த
நானூறு ஆண்டு அற்புதப் பயணத்தில்
போர்கள் - இடப்பெயர்வுகள் -
இழப்புக்கள் - இடிபாடுகள் -
துன்ப - துயர - வேதனைக் கண்ணீர்கள்
எம் புனிதர் கோவிலையும்
விட்டுவைக்கவில்லை.
பாதித் தாக்குதலை தானே தாங்கி
சேதங்கள் நடுவிலும் சுமைதாங்கியாய்
அழியா முத்திரையாய் - மண்ணின்
அடையாளமாய்
இன்று மீளுயிர்பெற்று மிளிர்கின்றது!

கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும்
இசைவாய்ப் பொருந்தி ஆண்டவர்க்கென்று
தூய கோவிலாய் வளர்ச்சிபெறுகிறது (எபே.2:21)
என்னும் உன்னத மறை நூல் வாக்கு
முற்றும் பொருந்த எம் திருத்தலம் இன்று
அற்புதமாக வளர்ந்தது விந்தையே!

இறைவனைப் பற்றி மனித மனங்களில்
எண்ணக் கருக்களாய் உயிர்பெற்றெழுந்த
ஆன்மீக வாஞ்சையின் அழியாக் கருவூலம்
ஆலயம் என்பது அறிவியல் உண்மை!
உள்ளத்தில் இதனை உள்ளூர நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர் வாழ்வின் உயரிய சொத்தாம்
ஆன்மீகம் - கல்வி - ஒழுக்கம் முதலாம்
அனைத்து வளங்களும் பாகுபாடின்றி
நாளைய சமுகத்தின் கைகளில் கொடுப்பது
நெறிமுறை தவறா நம்மவர் கடனே!

செபதேயு மக்கள் யோவானும் யாக்கோபும்
யேசுவை அணுகி அருகினிலே சென்று
ஆண்டவரே நீர் ஆட்சியில் அமர்கையில்
வலப்புறம் ஒருவரும் இடப்புறம் ஒருவரும்
உம்மோடு அமர்ந்திட எமக்கருள் தருவீர்
என்றிட யேசுவும் பதில் மொழியாக
பிற இனத்தவருள் தலைவர்கள் என்போர்
மக்களை அடக்கி ஆளுகிறார்கள்
அதிகாரம் செலுத்தி அழுத்துகின்றார்கள்.
உங்களுள் அப்படி இருத்தலாகாது
பெரியவராக இருந்திட நினைப்போர்
மக்கள் தொண்டராய் மாறிடவேண்டும்
முற்றுமே அனைவர்க்கும் பணியாளர் ஆகுக
(மாற்.10:35-45)
என்று மொழிந்த இறைமொழி உணர்ந்து

ஆண்டவர் திருமுன் பதவிகள் துறந்து
பெருமைகள் தேடும் ஆசையை அழித்து
பதவியை விரும்பும் தீமையை வெறுத்து
அன்பும் பண்பும் பணிவும் நிறைந்து
இறைவனின் தலத்தில் அனைவரும் சமமென
உணர்ந்து உழைக்கும் உன்னத நிலையை
உள்ளத்தில் இருத்தி ஊர்வளம் உயர்ந்திட
உறுதிகள் எடுத்து ஆலயம் வளர
கிளாலி மண் சிறக்க - பேரருள் சுரக்க
எங்களின் புனிதர் யாகப்பர் பரிந்துரை
நித்தமும் கிடைத்திட மகிழ்வுடன் வேண்டி
சத்தியன் யேசுவின் அருட்கரம் எம்மை
அணைத்து நடத்திட ஆசிகள் தந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருட் சகோதரி கிறேஸ்மேரி ஸ்ரனிஸ்லாஸ்

திருக்குடும்ப கன்னியர் மடம்

ஊர்காவற்றுறை.

அவர்களின்

# ஆசிச் செய்தி

கடல் வளம், பனை தென்னையை நில வளமாகக் கொண்டு, நம் ஈழத்திருநாட்டின் முதன்மை வாய்ந்த ஆலயமாகத் திகழும் எமது ஆலயத்தின் 410 ஆண்டுகள் நிறைவையும் புதிய ஆலயத்தின் திறப்பு விழாவையும் கொண்டாடும் இந் நன்நாளில் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கத்தோலிக்க வரலாற்றிலே இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளாலி என்ற பெயர் சூட்டப்பட்ட கிராமத்தில், போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் முதன் முதலாக தோற்றம்பெற்று கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல இந்து சமய மக்களுக்கும் ஏராளமான அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பொழிந்து வருகின்ற புனித யாகப்பரின் பாதக் கமலங்களை நன்றியோடு வணங்கி நிற்கின்றேன்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த காலத்தில் அங்கு பொறுப்பதிகாரியாக இருந்தவர் வன்னிச்சி என்ற இளவரசியை பிடித்து ஒப்படைத்தால் இவ்விடத்தில் இருந்த யாகப்பருக்கு ஓர் ஆலயம் அமைப்பேன் என்று வாக்குறுதி அளித்து தனது வேண்டுகோள் நிறைவேறியதால் ஓர் ஆலயம் அமைத்துக் கொடுத்ததாக வரலாறுகள் கூறுகின்றன. எனினும் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் வழிபாட்டிற்காக மக்கள் வைத்திருந்த புனிதரின் திருச்சுருபம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இருந்தும் விசுவாசிகளின் வழிபாடுகளை நடாத்த தகுந்த இடமாக மாற்றப்பட்டது. முதன் முதலில் "தேர்" ஏறி யாகப்பர் பவனி வந்ததும் இங்குதான் என்பதை பெருமையுடன் கூறலாம்.

இத்துணை புகழ்மிக்க இவ்வாலயம் போரின் தாக்கங்களுக்கு உள்ளாகி சிதைவடைந்த போதிலும் புனித யாகப்பரின் பக்தர்களின் ஆர்வத்தினாலும் பல நல்லுள்ளங்களின் தாராள மனத்தினாலும் மீண்டும் ஒரு புதிய ஆலயம் கட்டப்பட்டு காட்சி அளிப்பது புனிதரின் மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கைக்கும் ஆழமான இறை விசுவாசத்திற்கும் சாட்சியாக அமைகின்றது என்றால் மிகையாகாது.

2021 ஆம் ஆண்டு இக்கிராமத்திற்கும், இவ்வாலயத்திற்கும் சிறப்பு மிக்க ஆண்டாக அமைகின்றது. 410 ஆண்டை பெருமையுடனும் நன்றியுடனும் நினைவு கூர்ந்து புனிதரின் ஆசியைப் பெறுவதற்காக பக்தர்களுக்கு இப்புதிய ஆலயம் திறந்து வைக்கப்படுகின்றது.

எனவே இந்நாளில் இவ்வாலயத்தை கட்டியெழுப்ப முன்வந்து பலவழிகளில் அயராது உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் கிளாலி வாழ் மக்களுக்கும் புனிதரின் ஆசியும் பரிந்துரையும் நிறைவாகப் பொழியப்பட ஆசித்து நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்

**திருமதி.P.ஜெயராணி**

பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஒரு இனத்தின் அடையாளமென்பது அதன் கலை, பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் தங்கியுள்ளது. கடல் அலைகள் கரையை மோதி வர படகுகள் கடல் வளங்களுடன் இறங்கு துறையில் நங்கூரமிடப்படுகின்ற அழகு நிறைந்தவோர் கிராமம் கிளாலியாகும். அந்தவகையில் கிளாலியில் அமையப்பெற்ற புனித யாகப்பர் தேவாலயத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பேருவகையடைகின்றேன்.

வட இலங்கையில் போத்துக்கேயரால் கட்டப்பட்ட இரண்டாவது தேவாலயமாக கிளாலி புனித யாகப்பர் தேவாலயம் விளங்குகின்றது. இத்தலம் 400 வருட கால தொன்மையினை பறை சாற்றி நிற்கின்றது. அரசர் காலத்திலும் அதன் பின் வந்த போத்துக்கேயர் காலத்திலும் கிளாலி துறைமுகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. போத்துக்கேயர் இத் துறைமுகத்தினூடாக பாதுகாப்பாகப் பச்சிலைப்பள்ளிக்குள் இறங்கியதாகவும் இறங்கிய இடத்தில் யாகப்பர் தேவாலயத்தை அமைத்ததாகவும் வரலாறுகள் சான்று பகர்கின்றன. இத் தேவாலயத்தின் மீது பேதுறுப்புலவர் அர்ச் யாகப்பர் அம்மானை என்ற இலக்கியத்தை பாடியுள்ளார். பழைய தேவாலயமானது சிதைவுக்குள்ளாகும் நிலையில் பேணி பாதுகாக்க வேண்டியது வரலாற்றின் கடமையாகவே உள்ளது.

புதிதாக வானளாவ உயர்ந்து காட்சி தரும் இப் புதிய ஆலயம் நமது உள்ளங்களை இறைவன் பால் ஈர்த்துநிற்கும் என்பதில் ஐயமில்லை. இறைவன் நம்மை படைத்ததற்காக நம் வாழ்நாள் முழுவதும் இறைவனைப் புகழ்வது நமது கடமையாகும். அத்துடன் இப் பனித பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருவகை பொங்கும் உள்ளத்திலிருந்து



அருட்திரு கலாநிதி. மைக்கல் சவுந்தரநாயகம்
பரிபாலகர், புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தலம்
பண்டத்தரிப்பு யாழ்ப்பாணம்.

எனது உள்ளத்திலே நிலையான இடத்தை பெற்றிருக்கின்ற கிளாலி புனித சந்தியோகுமையோர் புதிய ஆலய திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற இதழுக்கு இந்த ஆக்கத்தை வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

போர்த்துகேயர் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் யாழ்ப்பாண பகுதியில் கத்தோலிக்க மறைபரப்புப்பற்றி சிறந்த, சரித்திர அடிப்படையிலான தகவல்களை எழுதி இருக்கின்ற இயேசு சபைக்குருவானவர் போராசிரியர் வீற்றோ பேர்னியோலாவின் எழுத்துக்களில் இருந்தும், யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் கத்தோலிக்க திருமறையின் பரவுதலைப்பற்றி நன்கு ஆராய்ந்து எழுதியிருக்கின்ற அமலமரித்தியாகி அருட்தந்தை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரின் ஆய்வுகளின் அடிப்படையிலும் மற்றும் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான அச்சுப்பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் உள்ள தகவல்களின் அடிப்படையிலும் கிளாலி சந்தியோகுமையோர் ஆலயம் பற்றி பின்வரும் முடிவுகளை எடுக்கலாம்.

போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இற்றைக்கு கிட்டத்தட்ட 400 ஆண்டுகளுக்கு முன் கிளாலிப்பகுதியில் சந்தியோகுமையோருக்கு உரிய முக்கியத்துவம் ஆரம்பமானது. அது (1620-1627) என்ற காலப்பகுதியாக இருந்தாலும் 1622ல் இது ஆரம்பிக்கப்பட்டது என்று கூறுவது ஏற்கக்கூடியதாக உள்ளது. கிறீஸ்தவர்கள் அல்லாதவர்களும், கிறீஸ்தவர்களும் அங்கு சென்று வழிபட்டு ஏராளமான புதுமைகள் தம் வாழ்விலே நடப்பதை அனுபவித்திருக்கிறார்கள். இந்த சிறிய ஆலயத்தின் ஆரம்பகட்டங்களைத் தொடர்ந்து வந்த காலங்களில் பரவ கிறீஸ்தவர்களும் ஆலயத்தோடு ஈடுபட்டு தங்கள் பங்களிப்பை செய்திருக்கிறார்கள். இது போர்த்துக்கேயர் காலத்தை தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது. இவ்வாறு ஈடுபட்ட பரவ கிறீஸ்தவர்களில் ஒருவர் தான் "சொரீஸ்" என்பவர். இவர் முன்னர் இருந்த அமைப்பை பெருப்பித்து ஓரளவு பெரிய கொட்டில் கோவிலாக அமைத்தது தெரிகின்றது.

இந்தக்கோவிலின் பழைமையையும் பெருமையையும் பறைசாற்றிநிற்கின்ற "சந்தியோகுமாயோர் அம்மானை" எனும் கிறீஸ்தவ தமிழ் நாட்டார் இலக்கிய வகைகளில் ஒன்றான நூல் 1647ல் வெளிவந்து இன்று வரை நிலைத்து இருக்கின்றது. இது பேதுருப்புலவரால் எழுத்தப்பட்டது. இந்த ஆலயம் ஆரம்பித்து 25 வருடங்கள் கடக்கின்ற நிலையில் அதன் பிரபல்யம் பற்றியும் தெளிவாக காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியோகுமாயோர் அம்மானை (சிறப்புப்பாயிரம்இ 1991ம் ஆண்டு 05ம் பக்கம்)

"வாம் பரி மேல் ஏறி மகிமைச் சுவடு அணிந்து
நாம் பணிய நீதி நடத்து **சந்தியாகுவுக்கு**
எச்சரிக்கையாக விலங்கிய யாழ்ப்பாணமதில்
பச்சிலைப்பள்ளி எனும் பற்றிற்**கிழாலியிலே**
கொம்பாஞ்யதேயேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
நம்பிச் சமைத்துவைத்த **நல் ஆலயத்திருந்து**
ஆரும் தமைத்தேடி அஞ்சலிக்க வாறவர்க்கு
தேறும் அனந்த நவம் செய்தே இருப்பது மெய்
செய் நவத்தினால் **கோடி சனங்கள் இங்கே வாறார்கள்...**"
("கொம்பாஞ்யதேயேசு" என்பது இயேசு சபைக்குருக்களை குறிக்கும்)

திருகோணமலையை சேர்ந்தவரும் யாழ்ப்பாணத்துடன் முன்னர் தொடர்பு உடையவருமாக இருந்த ஒரு பறங்கியர் இன பெண்மணி புனிதருடைய பரிந்துரையை அனுபவித்ததன் விளைவாக ஆலயத்தை கற்களால் கட்டுவதற்கு பண உதவி செய்திருக்கிறார். இது 1740ம் ஆண்டளவில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த சந்திரசேகரா, செருபீம் குடும்பங்களின் முன்னோர் ஒருவருக்கு கிளாலிப்பகுதியூடாக வன்னியை நோக்கி பயணம் மேற்கொண்டிருந்த போது கிளாலிப்பகுதியிலே சந்தியோகுமையோர் கொடுத்த அற்புதமான பாதுகாப்பிற்காக, அவர் செய்த நன்றி நிறைந்த, நேர்த்தியின் காரணமாக 1782ம் ஆண்டு காலப்பகுதியைத் தொடர்ந்து இன்று வரை அந்த ஆலயத்திற்கு தேவையானவற்றை செய்வதில் தங்கள் தாராள பங்களிப்பை நல்கி வருகின்றார்கள். இவருடைய பெயர் பூதனாராச்சி. ஆலய பதிவேடுகளில் அவருடைய பெயர் சுவாம் Swam என்று காணப்படுகின்றது. "ஆராய்ச்சி" என்ற பதம் அவருடைய பெயரோடு இணைந்து இருப்பதிலிருந்து அவருடைய பதவிப்பொறுப்பு விளங்குகின்றது. கிளாலியிலே அவரும் அவரோடு வந்தவர்களும் ஒரு இரவு தங்கியிருந்த போது குதிரை மேல் வீற்றிருப்பவராக காணப்பட்ட சந்தியோகுமையோர் அவரை எச்சரித்ததன் விளைவாக அவர் இருந்த இடத்தை விட்டு உடனடியாக விலகிச்சென்றதனால் உயிர் தப்பினார் என்று கூறப்படுகின்றது.

இதன் ஒரு வெளிப்பாடாக அவருடைய சந்ததியில் வருகின்ற ஒருவரான முதலியார் நீக்கிலஸ் சந்திரசேகரா மிகவும் தனித்துவமான, அந்தக்காலப்பகுதியில் இலங்கையில் வேறு எந்தவொரு கத்தோலிக்க ஆலயத்திலும் பயன்பாட்டில் காணப்படாத ஒரு பெரிய உயர்ந்த தேர்தனை கிழாலி சந்தியோகுமையோர் கோவிலுக்கு அன்பளிப்பு செய்திருக்கின்றார். 1834ம் ஆண்டில் அது பாவனையில் இருந்ததற்கு உறுதியான ஆதார ஏடுகள் உள்ளன. கிளாலியில் சந்தியோகுமையோருடைய அற்புதமான பாதுகாப்பை பெற்ற எங்கள் முன்னோரின் வம்ச வழியிலே வருகிறவர் தான் எனது அம்மாவின் தாயார். அதன் காரணமாகவே எங்களுக்கு ஆடி 20ம் திகதியன்று வருகின்ற நோவினை நாள் தரப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 வயது சிறுவனாக இருந்த போது என் பெற்றோர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் எனது தாய்வீட்டில் வாழ வந்த நாளிலிருந்து கடந்த 60 வருடங்களாக இந்த ஆலயத்திற்கு முடிந்தவரை வருடா வருடம் திருநாளிற்கு வந்திருக்கின்றேன். போரினால் இந்தப்பகுதிகள் சிதைக்கப்படும் முன் 10 நாட்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொண்டு கிளாலியிலே எங்களுக்கென்று சொந்தமாக இருந்த கல் வீட்டிலே கோவிலுக்கு மிகவும் எளிதாக நடந்து செல்லக்கூடிய தூரத்திலே நவ நாட்களின் போது தங்கியிருந்த நினைவுகள் பசுமையானவை. பெரிய வகுப்பிற்கு நாங்கள் வந்த போது எங்கள் உறவினர் சட்டத்தரணி ஹோமர் வன்னியசிங்கத்தோடு காரிலே கிளாலிக்கு வந்துபோவோம்.

என் அம்மாவின் தந்தை அப்புக்காத்து (Advocate) றேஜிஸ் ராஜகாரியர் தலைமையிலேதான் கிளாலிக்கு போகின்ற ஆயத்தங்கள் நடைபெறும். எங்கள் எல்லோருக்கும் இந்த பெருநாளிற்காக சிறப்பான உடுப்புக்கள் வீட்டிலே தரப்படும். இந்த பெருநாளிற்கு போய் கொண்டாடுவதை போல மகிழ்ச்சியான அனுபவம் நான் குருமடத்திலே இணைவதற்கு முன் எனக்கு இருக்கவில்லை. சிறு வயதிலிருந்தே அந்த விழாவிற்கு போய் வழிபாடுகளில் திருப்பலிக்கு உதவுவதில் பாடல்களை பாடுவதில் மறை உரைகளை கேட்பதில் பெற்ற அனுபவம் பிற்காலத்தில் குருத்துவ அர்ப்பணத்தை நான் செய்வதற்கு வித்திட்டது என்பதில் ஐயமில்லை. என்னுடைய அம்மாவின் சகோரர்களான அருட்தந்தையர்கள் அன்ரன் ராஜகாரியர், ஜோசப் ராஜகாரியர் ஆகியோர் குருக்களாக தங்களை அர்ப்பணிப்பதற்கும் என்னுடைய மூத்த சகோதரன் ஜோசப் ஜேம்ஸ் சவுந்தரநாயகம் பல்வைத்தியராக இருந்து கொண்டே கனடாவிலே தியாக்கோனாக தன்னை அர்ப்பணிப்பதற்கும் அவர்களுடைய கிளாலி யாத்திரை அனுபவங்கள் முக்கிய காரணமாக அமைந்திருந்தன என நான் நம்புகின்றேன். இந்த எனது சகோதரர் திருத்தொண்டர், கிளாலி பெருநாளன்று பிறந்ததனால் ஜேம்ஸ் என்ற பெயரைப் பெற்றார்.

சந்தியோகுமையோர் என்றால் San Deogu Mayor Saint James Major இது அப்போஸ்தலரான புனித யாகப்பரை குறிக்கும். (பெரிய யாகப்பர்) கோவில் ஆரம்பித்ததன் கிட்டத்தட்ட 400 ஆண்டு நிறைவடைகின்ற நிலையில் புதிய ஆலய திறப்பு விழாவை ஆடம்பரமாக கொண்டாடுவது Covid-19 பெருந்தொற்று நோய் காரணமாக தடைப்பட்ட நிலையிலும் புதிய கோவிலின் போட்டிக்கோவிலே புனிதரின் பெருவிழாத்திருப்பலியை ஆடி 25, 2020 அன்று தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்க எனக்கு கிடைத்த சந்தர்ப்பம் மறக்க முடியாத நினைவாக இருக்கின்றது.

"ஏரோது அரசன் திருச்சபையை சார்ந்த மக்கள் சிலரை பிடித்து கொடுமைப்படுத்தினான். யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றான்" திருத்தூதர் பணிகள் 12:1-2

எங்கள் தஞ்சமே சந்தியோகுமையோரே!
அல்லல் நீக்கி அன்பர் எம்மை ஆதரிப்பீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி புனித சந்தியோகுமாயோர் யாத்திரைஸ்தலம்



திருமதி கல்யாணி பாலதாஸ்
கிளாலி

போத்துக்கேயர் காலத்தில் கிளாலி புனித சந்தியோகுமாயோர் தேவாலயமாக 1620ம் ஆண்டளவில் உருவானதாக வரலாறுகள் மூலம் தெரியவருகிறது. அக்காலத்தில் இயேசு சபைக் குருக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தெல்லிப்பளையை நடுநிலையமாகக் கொண்டு, அங்கு சம்பேதுரு பாவிலு ஆலயத்தைக்கட்டி சமயப்பணியாற்றி வந்தனர். மனந்திரும்பிக் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியவர்களுள் ஒருவராக பேதுரு புலவரும் விளங்கினார். கிளாலி புனித சந்தியோகுமாயோர் தேவாலயத்தை நிர்வகித்தவர்கள் பயன்படுத்தியதைப் போன்ற ஒரு படைப்பை எழுத்துருவில் தருமாறு கேட்டதற்கிணங்க பேதுரு புலவர் குறித்த காலத்தில் தெல்லிப்பளையில் சமயத் திருப்பணியாற்றிய சுவாங்கறுவாலு சுவாமியாருடைய வழிகாட்டுதலிலும், மதுரையில் இருந்து கிடைக்கப்பெற்ற அகவற்பாக்களின் துணை கொண்டும் சந்தியோகுமாயோர் அம்மானையை 1647ம் ஆண்டில் இயற்றப்பட்டதற்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன. இச்சான்றான சந்தியோகுமாயோர் அம்மானையை தற்காலத்தவர்களும் அறியவேண்டும் என்பதற்காக இவ்வருடம் மீண்டும் அச்சேற்றப்பட்டுள்ளது.

இத்தேவாலயமே வட போர்த்துக்கேய தமிழ் இராசதானியின் "கொம்பொஸ்ரெல்லா" ஆகியது. இடையிடையே நடைபெற்ற கண்டி இராச்சிய படையெடுப்புக்களின் பின்னணியில் முக்கிய கடல் காவல்த்துறையாக கிளாலி காவற்றுறை மாறியது. அங்கு கோயில் குடிகொண்டெழுந்து பரிமேல் ஏறிவரும் யாகப்பர் கொம்பொஸ்ரெல்லாவில் அவர் உடல் இருக்கும் ஆலயத்திலிருந்தது போன்று யாழ்குடா, மன்னார், ஆணையிறவு கோட்டைகளின் பாதுகாலவர் ஆனார். இங்கு பாடப்பட்ட காப்பு அம்மானையே சந்தியோகுமாயோர் அம்மானை. போர்த்துக்கேய வீரர்கள் புதிய கிறிஸ்தவர்களுக்கும் அருகே இருந்த 40 கிராமங்களுக்கும் தலைமை தாங்கிய வெள்ளைமுதலியார் ஷெபெற்றன் கோருக்கும்; பாதுகாப்பாகவிருந்தனர். போர்த்துக்கேய கோவில் தலங்களுள் புதுமை வாய்ந்ததும் பழைமை வாய்ந்ததும் கிளாலியிலுள்ள சந்தியோகுமாயோர் ஆலயமே. அவர் பரிவாரங்களான பல புனிதர்கள் காவல் தெய்வங்கள் போன்று சிறு கோவில்கள் இன்றும் கிளாலியில் சுற்றிவரக்காணப்படுகின்றன. 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இந்த யாத்திரைஸ்தலத்திற்கு பெருவாரியான பக்தர்கள் வந்து 23, 24 ஆம் திகதி ஆடியில் பெருவிழாவினைக் கொண்டாடினர்.

யாழ்ப்பாணக் கோவில்களை விட கிளாலியில் புனித சந்தியோகுமாயோர் மிக முக்கிய கேந்திர மைய ஆலயமாக அமைந்தது எனலாம். பூநகரிக்கு நேர் எதிரே அமைந்த நல்லூரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவிடம் இலங்கையின் பெருநிலப்பகுதியிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களை தடுக்கும் மையமாக அமைந்ததனால் வேறுபட்ட (யாழ், சைவ, வைணவ பௌத்த) மரபுகள் கலந்த பிராந்தியத்திற்கு வித்தியாசமாகவும் பாதுகாப்புக்கு உகந்ததாகவும் போர்த்துக்கேய மிஷனரிகளும் இராணுவமும் உணர்ந்ததன் பயனே கிளாலியின் எழுச்சிக்கும் சந்தியோகுமாயோர் ஆலயத்தின் தோற்றத்திற்கும் காரணமாகலாம். 1641 ஆம் ஆண்டின் யேசு சபை பதிவேடுகளும் கடிதங்களும் இதற்கு சான்று பகர்கின்றன. இது முகமாலை கோவிலுக்குச் சேர்ந்ததாக குறிப்பிடப்படுகின்றமையால் யேசுசபைக்குருக்களே இதன் பொறுப்பாளர்களாக இருந்தனர் என ஊகிக்கலாம். இங்கிருந்த சிலுவை புதுமைமிக்கதென மனுவேல் சில்வேர்யே யூன் எழுதியுள்ளதாகக் குறிப்பு உண்டு. பல கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர் அல்லாதவர்களும் இங்கு வருகிறார்கள். "சந்தியாகே" என்ற மந்திரச்சொல்லை உச்சரித்தே இங்கு வருகின்ற பக்தர்கள் வேண்டுகின்றனர்.

1679 ஆம் ஆண்டளவில் தென்னமரவடியில் மரிய செம்பாத்தை என்பவர் வன்னிச்சியாராக இருந்தார். யாழ்ப்பாணத்து ஒல்லாந்தர் கோட்டைக்குள் வீட்டுக்காவலில் பிணையாக இருக்கும் அவருடைய முறை வந்தபோது, அவர் அவ்வாறு இருக்க மறுப்புத் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்லாது அவர் ஒல்லாந்தருக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஒல்லாந்தருக்கு தகவல் கிடைத்திருந்தது. தெல்லிப்பளையை சேர்ந்தவரும், சந்தியோகுமையோரை விசுவசிப்பவருமான புதன் ஆராச்சி (புதநாத ஆராச்சி) என்பவர் ஒல்லாந்தருக்கும் மிகவும் விசுவாசியான இருந்தார். புதன் ஆராச்சி ஒல்லாந்தருடைய கட்டளைக்கிணங்க மரிய செம்பாத்தையை கைது செய்து வருவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார். வழியில் இரவைக் கழிக்க கிளாலியில் சிறிய மடத்தில் புதன் ஆராச்சியும், அவரது குழுவினரும் தங்கியிருந்தனர். அக்குழுவினரில் ஒருவர் புதன் ஆராச்சியை கொலை செய்யத் திட்டமிட்டிருந்தார். இதனை முதல் நாளே கனவின் மூலம் தெரிந்துகொண்ட புதன் ஆராச்சி தான் படுக்கும் இடத்தை மாற்றியிருந்தார். விடயம் தெரியாமல் அவரை ஈட்டியால் குத்தி கொலை செய்ய வந்தவரின் முயற்சி தோல்வியடைந்து கைதானார்.

புதன் ஆராச்சி தான் தங்கியிருந்த இடத்தில் முன்னர் போர்த்துக்கேயரால் சந்தியோகுமாயோர் தேவாலயம் கட்டப்பட்டிருந்து ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டதையும் அறிந்திருந்தார். அவர் இந்தக் கொலை முயற்சியில் தப்பித்துக் கொண்ட காரணத்தினாலும், செல்லும் விடயம் வெற்றியாக முடிந்தால் கிளாலி சந்தியோகுமாயோர் தேவாலயத்தை தனது செலவில் புதுப்பித்து பெரிதாக்கிக் கட்டுவதாக நேர்த்தி வைத்துக் கொண்டு தனது தென்னமரவடி பயணத்தை தொடர்ந்தார்.

வன்னிச்சியாராக இருந்த மரிய செம்பாத்தையின் இருப்பிடம் அறிந்து புதன் ஆராச்சி கொக்கிளாய் வளைகுடா தென்னமரவடிக்குச் சென்றார். அங்கு மரிய செம்பாத்தையுடன் மிகவும் நெருங்கிப் பழகி அவருடைய நம்பிக்கைக்கும் மதிப்பிற்கும் உரியவராகி பரிசில்களும், புகழாரங்களையும் அளந்து பெற்றுக் கொண்டார். ஒல்லாந்த நிர்வாகத்தினரால் மரிய செம்பாத்தையிற்கு எந்த வித தண்டனையும் கிடைக்காமல் இருக்க தான் ஆவன செய்வதாக உறுதி அளித்து, இதனை நிரூபிப்பதற்காக பல்லக்கிலேயே கௌரவமாக தென்னமரவடியில் இருந்து யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதாக நாகபாம்புக் குடங்களைத் தொட்டு பொய்ச் சத்தியங்கள் செய்தார். இவற்றையெல்லாம் உண்மையென்று நம்பிய மரிய செம்பாத்தை புதன் ஆராச்சியுடன் புறப்பட்டார். அவர் நம்புவதற்காக புதன் ஆராச்சி யாழ்ப்பானத்திலுள்ள ஒல்லாந்தர் கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசல் வரை மிகவும் மரியாதையாக பல்லக்கில் அழைத்துச் சென்றார். கோட்டை வாசலில் செம்பாத்தையை பல்லக்கில் இருந்து இறக்கி கைகளில் விலங்கிட்டு உள்ளே அழைத்துச் சென்று ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தார். மரிய செம்பாத்தையை விளக்கத்தின் பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார் என்று வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒல்லாந்தரின் விசுவாசத்திற்கும், பெருமதிப்பிற்கும் உரியவர் புதன் ஆராச்சி என்று யாழ்ப்பாண கௌமுதியில் (பக்.183) தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் புதன் ஆராச்சி தான் உயிர்தப்பியபோதும், தனது பயணம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவும் செய்த நேர்த்திக் கடனுக்காக கிளாலியில் இருந்த சிறிய தேவாலயத்தை பெருப்பித்துக் கட்டி தங்க மற்றும் வெள்ளி ஆபரணங்கள் அணிவித்துள்ளார். இதற்கு இன்றும் அவ்வாபரணங்கள் சான்றாக உள்ளன. இந்தக் காலகட்டத்தில் தூய யோசவ் வாஸ் அடிகளார் மாறுவேடத்தில் கிளாலிப் பகுதியிலும், இந்த யாத்திரைஸ்தலத்திலும் தங்கிச் சென்றுள்ளார் என ஆதாரங்கள் காணப்படுகின்றன.

எப்படியோ இக் கிளாலி சந்தியோகுமாயோர் யாத்திரைஸ்தலம் பின்னர் ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. 1740 இல் கத்தோலிக்கர்கள் திரும்பவும் சாத்வீகப் போராட்டத்தில் வெற்றி பெற்றதன் பின் சோறிஸ் என்ற கிறிஸ்தவரின் முயற்சியால் சிறு குடிசைக்கோயிலாக எழுப்பப்பட்டு பின் திருகோணமலையைச் சேர்ந்த பறங்கிப் பெண்மணியின் பண உதவியினால் கட்டடமாக எழும்பியது. இந்தக் கட்டடம் 19 ஆம் நூற்றாண்டில் எழுந்த எல்லா கத்தோலிக்க ஆலயங்கள் போன்று முருகைக் கல்லும், செங்கல்லும், சுண்ணாம்பும் முதிரை மர உயர் தூண்களும் கொண்ட அழகிய சிறிய கட்டடமாக இருந்தது.

ஒல்லாந்தர் கலாபனையின் போது ஒழித்துவைக்கப்பட்டிருந்த பண்டைய கிளாலித் தேவாலயத்தின் குதிரையில் சவாரிசெய்யும் சந்தியோகுமாயோரின் திருச்சொரூபம், உயர் பாதணி, தங்கத்திலான முக்கோணவடிவ போர்த்துக்கேய எழுத்துக்கள் பதிக்கப்பட்ட தலைக்கவசம் என்பன தேவாலயம் நிர்வகிப்பவர்களால் வயலில் கண்டுபிடிக்கப்பட்டு வெளிக்கொண்டுவரப்பட்டன. இங்கு சந்திரசேகர முதலியார் காலம் 1834 முதல் திருவிழாவின் பொழுது ஒரு பெரிய எடைகுறைந்த தேர் மணற்பகுதிகளில் உருளக்கூடிய சில்லுகளுடன் யாத்திரைஸ்தலத்தையே அழகுபடுத்தியது. இப் பெரிய தேருடன் ஆறு சிறிய கூடுகள் சேர்ந்து கொள்ளும் ரத பவனி கண்கொள்ளாக் காட்சியாக 24ம் திகதி ஆடி இரவு இருந்தது. இந்நாட்களில் கூத்துக்கள், நாடகங்கள், சந்தியோகு அம்மானை, கவிகள் மற்றும் பாடல்கள் சிறப்பம்சமாகும்.

கிளாலி சந்தியோகு யாத்திரியர்களுக்குரிய ஒரு பிரதான பிரதேசமாக உருப்பெற்று, புகழ் பெற்ற வேலையான திருமணப் பதிவாளரின் மனைவியான திருமதி இன்நேசம் வஸ்தியாம்பிள்ளை அவர்கள் இந்த கிளாலிச் சமூகத்திற்கே பொறுப்பாகவும், திருவிழாக்கால ஒழுங்குபடுத்தல்களுக்கு நிழலாகவும் இருந்துள்ளார். இவர்களைத் தொடர்ந்து வஸ்தியாம்பிள்ளை வரப்பிரகாசம் ஆரோக்கியம் தம்பதியினர், பின்னர் இவர்களின் மருமகன் பேதுறுப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை இப்பணியை செய்துள்ளார்கள். திருவிழாவே சந்தியோகுமாயோர் யாத்திரைஸ்தல சிறப்புமிக்க விடயமாக விளங்கியமைக்கு முதல் ஏழு நாட்களும் மாலையில் சந்தியோகுமாயோர் கூடு யாத்திரைஸ்தலத்தை வலம் வந்ததும், எட்டாம் நாள் 23ம் திகதி ஆடி மாலையில் அருட்தந்தை ஒருவருடன் கிளாலியிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயங்களில் முறையே புனித செபஸ்ரியார், புனித அந்தோனியார், புனித பிரான்ஸிஸ் சவேரியார், புனித மரியாள், புனித தோமையார், புனித மிக்கேல் அதிதூதர், ஆகியோரின் திருச்சொரூபங்கள் அவரவர் கூடுகளில் பவனியாக யாத்திரை ஸ்தலம் வரை வருவார்கள். இவர்களை வயலின் தொடக்கத்தில் வைத்து குடை, கொடி, ஆலவட்டம் மற்றும் மேளதாளத்துடன் சந்தியோகுமையோர் யாத்திரை ஸ்தலம் வரவேற்று சந்தியோகுமாயோர் கூட்டுடன் சேர்ந்து தீப்பந்தங்களின் ஒளியில் கடற்கரை மற்றும் வயல்வெளியை உள்ளடக்கி பவனிப்பாடல்களுடன் பவனி முடிவில் மாதாவை வணங்கி தத்தமது தேவாலயங்களுக்கு திரும்புவதும். 24ம் திகதி ஆடி மாலை தேர்ப்பவனி இடம்பெறுவதுமாகும். இந்த ஏழு கூடுகளின் பவனியானது 1964ம் ஆண்டில் ஆயர் இல்லத்தினால் சில காரணங்கள் காட்டி நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் ஒன்பதாம் நாள் காலைத் தேர்ப்பவனி நடந்து கொண்டேயிருந்தது. காலப்போக்கில் இப்பவனியை 1986 முதல் 25ம் திகதி காலை தேர்ப் பவனியாக மாற்றியமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு யுத்த காலப்பகுதியில் குறிப்பாக 1996 முதல் 2010 வரை இவ் யாத்திரை ஸ்தலமானது கடற்படை இராணுவத்தளமாக இருந்தது. அதற்கு முந்திய காலப்பகுதியான 1993 மார்கழி 31ம் திகதி யாத்திரைஸ்தலத்தின் கோபுரப்பகுதி விமானத்தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்க விடயமே. எனினும் 10ம் திகதி சித்திரை 2011 அருட்பணி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை முந்நிலையில் புதிய திருச்சுருவம் வைக்கப்பட்டு மீண்டும் வழமைபோன்று திருவிழா ஆரம்பிக்கப்பட்டாலும் அங்கு தேர் முற்றாக அழிக்கப்பட்டு இருந்தமையால் தனியே 25ம் திகதி ஆடி கூடு மட்டுமே சுற்றுகின்றது.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட 12 யேசு சபைக் கோவில்களில் பிரபல்யமிக்க யாத்திரை ஸ்தலம் கிளாலி சந்தியோகுமாயோர் யாத்திரைஸ்தலமாகும். புனிதரின் சுடர் சமாதிவைக்கப்பட்டிருக்கும் ஸ்பானிய தேசத்தின் கொம்பொஸ்ரெல்லா பேராலயம் போன்ற சிறப்புப் பெறாவிடினும் யாழ்ப்பாண இராச்சிய கத்தோலிக்கத்தின் தளிர்விடும் கத்தோலிக்கத்திற்கு கிளாலி புனித சந்தியோகுமாயோர் யாத்திரைஸ்தலம் மங்கா ஒளிக்கீற்றாக நின்று நிலைத்து இன்றும் பிரகாசித்து தொடருகிறது.

**உசாத்துணை நூல்கள் :**


- 25 Years' Catholic Progress (1893-1918) - Rev. S. Gnana Prakasar - O. M. I
- Portuguese in Northeast Sri Lanka (1543- 1658) - S. Pathmanathan.
- The Ceylon Antiquary - Rev. S. Gnana Prakasar - O. M. I
- சந்தியாகு மாயோர் அம்மானை, 1991




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The celebration of the feast of St. James at Kilaly



Mr.Balendran (Bala) Vanniasinkam
Canada

The origin of the celebration of the feast of St. James at Kilaly on the 25th of July each year can be traced back to the 18th century when Ceylon was under the rule of the Dutch. Don Louis Poothar alias Samarasekere Mudaliyar ( better known as, and hereafter referred to as, Poothanarachchi or the Mudaliyar), an Arachchi (Chief Headman) was commissioned by the Dutch Commissioner in Jaffna to lead an expedition to capture the Vannichi Maria Sembatti (Chieftainess) who defied all efforts to be subdued by the Dutch.

On his way to the Vanni, he had to camp at Kilaly, near Pallai. That night, in a vision, St. James appeared to him mounted on a horse warning him of imminent danger to his person. The Mudaliyar then moved over unnoticed to a spot some distance away. Hardly had he made this precautionary move when some disagreement arose amongst his followers and, in a scuffle that ensued one of his followers who slept next to him before he moved over to a different spot was mistakenly stabbed to death. When he related his experience at day-break he was shown the hiding place where the statue of St. James had been concealed by the residents of Kilaly.

Full of gratitude for his miraculous escape, the Mudaliyar invoked the blessings of St. James and vowed to build a shrine and venerate the Saint. The expedition was considered a great success as the Mudaliyar had the Vanni Chieftainess Maria Sembatti brought and delivered to the Dutch in Jaffna by a clever stratagem. Later, he erected a shrine dedicated to Santiago Maiyor (St.James the Major) at Kilaly in fulfillment of the vow he made. His descendants hold an annual nine day novena in July seeking the grace of St.James, the benign Saint of their ancestor.

Before the commencement of the nine Novenas Poothanarachchi referred to as Sivam in Church records and his son Don Lawrencepillai venerated at this shrine.

Anandasipillai (Grand-Daughter of Poothanarachchi and Daughter of Don Lawrencepillai) married Sandrasagra Mudaliyar Nicholaspillai Mudaliyar . They had two sons and five daughters. One of the sons being Fr. X.N Sandrasagra, O.M.I., Anandasipillai Sandrasagra allocated six of the original novenas to her other six children and the balance of the nine novenas to three daughters of her maternal uncle Don Mark Simon Cherubim.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The original Novenas were allocated to the following:

16th July - Thangatchie (Mrs. Paul Vincent), daughter of Nicholas and Anandasipillai Sandrasagra
17th July - Jacopillai (Mrs. Santhiapillai), daughter of Nicholas and Anandasipillai Sandrasagra
18th July - Muttukutti (Mrs. Karalasingam), daughter of Nicholas and Anandasipillai Sandrasagra
19th July - Annarchie (Mrs. Simon Cherubim), daughter of Nicholas and Anandasipillai Sandrasagra
20th July - Mariamuttu (Mrs. Ariyanayagam), daughter of Don Mark Simon and Isabella Cherubim
21st July - Annamuttu (Mrs. Saverimuttu), daughter of Don Mark Simon and Isabella Cherubim
22nd July -Sabina (Mrs. P.S.Sandrasagra), daughter of Don Mark Simon and Isabella Cherubim
23rd July - Magdalene (Mrs. N Sinnathamby), daughter of Nicholas and Anandasipillai Sandrasagra
24th July - Joachim (Mr. Joachim Sandrasagra), son of Nicholas and Anandasipillai Sandrasagra

The chart below shows the descendants of Louwys Puther (Father of Samarasekera Mudaliyar better known as Poothanarachchi) till the time the Novenas started:

Louwys Puthar
alias
Don Louis Poothanathar (a signatory to the Thesawalamai Law)
|
Samarasekara Mudaliyar
alias
Don Louis Poothar
better known as
Poothanarachchi
|
Don Lawrencepillai
m
Berelgaria d of Don Philip Sangarapillai
|
Anandasipillai
m
Sandrasagra Mudaliyar Nicholaspillai Mudaliar
|

Jacopillai | Magdalene | Joachim | Muttukutty | Fr. F. X. S | Thangatchy | Annarchie

---

Don Philip Sangarapillai
|

Don Mark Simon Cherubim
m
Isabella
|
Daughters Annamuttu, Mariamuttu, Sabina who were allocated novenas and 8 other children

Berelgaria
m
Don Lawrencepiallai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The task of each of the above was to organize his or her novena and to meet all expenses in connection therewith and to nominate a child or other direct descendant of Poothanarachchi to take over the function of "Novena Holder". This process continued from generation to generation with the novena holder expected to represent the other direct descendants of the original novena holder.

The following is a list of novena holders during the 20th century:

16th July – Mrs. Gertrude Homer-Vanniasinkam followed by Mrs. Ruby Vivienne Vanigasooriyar
17th July – Mrs.Anne Cherubim followed by Prince Cherubim and Mrs. Isabel Homer-Vanniasinkam
18th July - Mrs. Gertrude Homer-Vanniasinkam followed by Mrs. Ruby Vivienne Vanigasooriyar
19th July – Mrs. Lily Sandrasagra and Mrs. Jessie Sandrasagra followed by Mrs. Pansy Rajakarier
20th July – Mrs. Mary Philipa Tambinayagam followed by Mrs.Kithamma Rajakarier
21st July – Mrs. Anne Anastsia Saverimutto followed by Jim Saverimutto and Miss Beata Saverimutto
22nd July –Mr. J.N. Sandrasagra followed by Dr. Ponrajah Sandrasagra
23rd July – Mr. F.X. Nicholas followed by Mrs. Gertrude Nicholas followed by Mrs. Marcella Philip
24th July - Mrs. Gertrude Homer-Vanniasinkam followed by Mrs. Ruby Vivienne Vanigasooriyar

Joachim Sandrasagra was appointed by his mother Anandasipillai as the Trustee and custodian of property belonging to the church including jewellery. The trustee had also, inter alia, to liaise with the clergy and the Vidane of Kilaly on all matters relating to the smooth and orderly functioning of the church services and the novenas.

The trusteeship was passed on to his daughter Mrs. Gertrude Homer-Vanniasinkam who in turn handed it over to her daughter Mrs. Ruby Vanigasooriyar. The custodianship of church property ended when all church property was handed over to the Diocese of Jaffna in the mid-eighties of the last century.

The celebrations during the first seven days starting July 16 consisted of Holy Mass in the morning, and in the evening the recitation of the Rosary, the Litany of St. James and Benediction. The celebrant of the Holy Mass, Benediction and Vespers is a Priest designated by the Jaffna Diocese, usually the Parish Priest of Mirisuvil.

Following Benediction on the first seven days the statue of St. James is carried in a koodu in a procession with four stops (the last of which is believed to have been the spot where the statue of St. James had been concealed) for prayers to St. James. Viruthams in praise of St. James are sung in between these stops. On the eighth day, after Vespers, the statues of the Blessed Virgin Mary, St. Michael, St. Anthony, St. Sebastian, St. Francis Xavier and St. Thomas from other churches in Kilaly village are brought in Koodus to St. James' Church and join St. James' statue in a procession. Viruthams in praise of the Blessed Virgin Mary, St. James and the other Saints are sung in between the stops for prayers. On the ninth day, after Vespers, St. James' statue along with the statues of the Blessed Virgin Mary, St. Francis Xavier and St.Thomas are taken in procession on the Ther (Chariot) which is pulled by the devotees around the Kodimaram hoisting the flag of St. James.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The above celebrations could not have been carried out without the active participation of the late Vidane of Kilaly, Mr. Varapragasam, his son Mr. Jeyaraj and the residents of Kilaly. It was Mr. Varapragasam who led the prayers in Church before and after each service and sang many of the songs of praise during the processions. In addition he arranged for other members of the flock to carry the koodus, to beat the drums, to sing praises , to carry the torches (panthams), to erect and dismantle the Kodimaram (Flagstaff), to clear the paths the processions would take and all other functions pertaining to the celebrations. We are also grateful to the people of Kilaly who have assisted the Vidane in the above functions and helped in numerous other ways to make the Novena season a success.

Here is a list of four generations of descendants starting from the fifth generation of Poothanarachchi :

**Gertrude Sandrasagra and Joseph Homer-Vanniasinkam**

- Ruby and Asirvatham Snell Vanigasooriyar
  - Padmini and Cyril Saverimuttu
    - Vino and Pat Smith, Radhi and David Riley, Shikka Saverimuttu, Shanti and Maitri Kurukulasuriya, Keshi and Mike Minett, Hari and Christina Saverimuttu, Suvi and Steve Jones and their families
  - Satiendran Vanigasooriyar
    - Mano and Shehan Wijetilaka, Vidya and Ray Lord, Savi Vanigasooriyar, Rohan and Mary Kate Vanigasooriyar and their families
  - Carmini and Ernest Saverimuttu
    - Dushy and Brett Martin, Vasanthi Saverimuttu, Andy and Deva de Silva, Mahendran and Dilys Saverimuttu and their families
  - Rukmini and Jacob Rasanayagam
  - Fr. Aloysius Harindran Vanigasooriyar
  - Ravindran and Sumithrai Vanigasooriyar
    - Suhendran and Janine Vanigasooriya, Niranjali and Sheran Dominic, Sharmali and Gihan Seneviratne, Narendran and Roshini Vanigasooriyar and their families
  - Nalaini Vanigasooriyar
- Pearly and Gabriel Arasaratnam
  - Rajan Arasaratnam and family
- James and Margaret Homer-Vanniasinkam
  - Shanthi Thomas,
  - Poorani and Manohar Muttukumaru
    - Neela, Sanjeev, Renu and their families
  - Anandhi and Angelo Rasanayagam
  - Surendran and Kitty Homer-Vanniasinkam
    - Anand and family
- Alfred and Isabel Homer-Vanniasinkam
  - Sumithrai and Ravindran Vanigasooriyar
    - (Children listed under Vanigasooriyar family)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Balendran and Princess Vanniasinkam

Lakshmi and Kit Smithers, Indhiran and Anne-Marie Vanniasinkam, Iswaran and Shehara Manju Vanniasinkam and their families

Chithrai and S.X.Gnanasegaram

Logeswary and Linton Anthony and family

Nimalendran and Freda Vanniasinkam

Nadine Vanniasinkam, Johann and Serena Vanniasinkam, Perrin and Angelene Vanniasinkam and Vanora Vanniasinkam

Yohendran Homer-Vanniasinkam

Chandiran and Anoja Homer-Vanniasinkam

Dhiren Homer-Vanniasinkam, Jeanne Homer-Vanniasinkam

Joe and Cohaneesveri (Baba) Homer-Vanniasinkam

Rashantha and A.J.Devanesan,

Ruha Devanesan , Arjun Devanesan

Shervanthi Homer-Vanniasinkam

Dijen and Nirupa Homer-Vanniasinkam

Ashvanth Homer-Vanniasinkam , Aarjan Homer-Vanniasinkam and Merisha Homer-Vanniasinkam

## H. A. P. Sandrasagra and Jessie Cherubim

Wilfred and Barbara Sandrasagra

Romaine, Constance and Patricia Sandrasagra and their families

Ethel Helen (Lennie) and A.P.Sandrasagra

Pathma and Pathman Ratnesar

Harry and Vasanthi Sandrasagra

Madurika and H. Campbell-Jones, Sabrina Sandrasagra and their families

Carmini and Nirmal Muthunayagam

Aneetha and J. McLelland and family

Nirmala and Harvey Shear

Manomani and Sivagurunathan

Minoli and Hugo Muttukumaru

Romola and Bertie Sebastiampillai

Prathiva Sebastiampillai, Ahila Sebastiampillai

Malathi and Mano Bastiampillai

Shalini Bastiampillai, Tarun Bastiampillai

Arul and Lilanthini Muttukumaru

Shyan Muttukumaru , Aaron Muttukumaru

## James.N. and Muthachi Sandrasagra

Thangamma and Chithravelu

C.Sandrasagra

(Other children and families of J.N. Sandrasagra not known at this time)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Joseph and Anne Magdalene Cherubim**

Joseph Prince and Beryl Cherubim

Princess and Balendran Vanniasinkam

(Children under Homer-Vanniasinkam family)

Nidra and Osmund Rajakarier

Shankari Bastiampillai, Sudeshni and Michael Ryan and their families

Iswaraj and Amala Cherubim

Shamishta and Jay Sundaram, Sean Cherubim and their families

Jeyakumar and Barbara Cherubim

Prasanth and Chemeli Cherubim

Pravin and Shaari Cherubim, Shanik and Gisele Cherubim, Shyara Cherubim and their families

Isabel and Alfred Homer-Vanniasinkam

(Children listed under Homer-Vanniasinkam family)

**Norbert Cherubim**

**Constance and Joseph .N. Sandrasagra**

Mary Theresa and Dr. Ambrose Amirthanayagam

Malar and Paul Rambukwelle

Tikiri Rambukwelle and family

Guy and Indrani Amirthanayagam

Aruna and Vathani Amirthanayagam, Indran Amirthanayagam, Revantha Amirthanayagam, David and Marjorie Amirthanayagam, Mareeni and Ishka Stanislaus and their families

Savundari and Joseph Bastiampillai,

Nirmali and Emil Balasandiran, Chemeli and Prasanth Cherubim, Harisha Bastiampillai and their families

Gratien and Soma Amirthanayagam,

Pradeep and Annie Amirthanayagam and family

Rohini and Paul Xavier

Ramnik and Shamantha Xavier, Dhiren and Soundha Xavier, Niraj Xavier, Niranthi and Arunan Arunakumaren, Amirthi and Sathiendra Jeyarajan and their families.

Ponrajah and Pumeni Sandrasagra

Narishta and Percy Ratnanather

Thilak Ratnanather

Diva and Dayanthi Sandrasagra,

Mithre Sandrasagra and family

Enoka and Cyril Stanislaus

Anjali Stanislaus, Ishka and Mareeni Stanislaus, Arusha Stanislaus and their families

Manik and Anne Sandrasagra

Koshika and Nuwan Samarasinghe, Mumu Sandrasagra, Uma Sandrasagra



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Victor and Constance Cherubim**

Neil and Vasanthi Cherubim

Romer Sanjay Cherubim

Raji and Joseph Sandrasagra,

Tony and Bernadette Sandrasagra

Sabina Sandrasagra

Victor and Jennifer Sandrasagra

Oona Sandrasagra

Michael and Roshini Sandrasagra

Lauren Sandrasagra, Justin Sandrasagra

Shiranthini and Joe Pakiyanayagam,

Dilkush Pakiyanayagam

Noah Faucher, William Faucher

Deva and Nirmala Cherubim

Maresha and Paramjit Sarai

Jaiden Sarai, Shailen Sarai, Akiren Sarai, Inaara Sarai

Natasha and Shawn Miller

Nathaniel Miller, Nikita Miller, Nigel Miller

Niran Cherubim

**Jessie and H.A. P. Sandrasagara**

Wilfred and Barbara Sandrasagra

(Children listed under H.A.P.Sandrasagra family)

Ethel Helen (Lennie) and A.P.Sandrasagra

(Children listed under H.A.P.Sandrasagra family)

Minoli and Hugo Muttukumaru

(Children listed under H.A.P.Sandrasagra family)

**Lily and Emmanuel Raja Sandrasagra**

Pansy and Angelo Rajakariar

Gerard Rajakariar

Jim and Josephine Sandrasagra

Sashini and Xavier Constantine and family

Lucky and Chandran Chandrasekera, and family

Martin and Sudesh Sandrasagra and family

Anton and Stella Sandrasagra and family

Rohan and Rajini Sandrasagra and family

Indran and Vuvuna Sandrasagra and family

Bernadette and Soori Sooriyakumar and family

Romesh and Violetta Sandrasagra and family

Nalaini and Sundaram Paramanathan and family

(Details of the children of the above not available at this time)

Harry and Suhasini Sandrasagra

Catherine Sandrasagra



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jacintha and M. Dhanendran
Anthony and Katy Dhanendran, Marie and Mathew Wildt and their families
Vijayakumar and Shirani Sandrasagra
Ashley Sandrasagra
Sridharan Sandrasagra
Sandrika Sandrasagra
Annapoorani and Lucien Arasaratnam
Wanohara and Anthony Mariathas
Mirani and Kailainathan
Dinusha and Jude Arianayagam, Nishanthan and Andrika Kailainathan and their families
Bernadette and Louis Anandarajah
Arish and Milla Anandarajah, Minukshi and Michael Amirthanathan and their families
Simon and Rita Sandrasagra
Siri and Doreen Sandrasagra
Kaushal Sandrasagra and family
Guy and Lorene Sandrasagra and family
Mario and Preethi Sandrasagra and family
Mary Anne Sandrasagra and family
Pansy and Bimal Silva and family
Srilal and Sharmi Sandrasagra and family
Carmelita and J.F.X.Jeyanayagam
Suresh and Janaki Jeyanayagam
Luigi and Franziska Jeyanayagam, Gino Jeyanayagam, Luciana and Nalaka Fernando and their families
Lilanthini and Arul Muttukumaru
(Children listed under Minoli and Hugo Muttukumaru)
Suren and Sumathy Jeyanayagam
Britney Jeyanayagam
Joseph and Raji Sandrasagra
(Children listed under Victor Cherubim family)

**Gabriel Tambinayagam and Mary Thangam Sandrasagara**

Margaret Kithamma and Regis Rajakariar
Angelo and Pansy Rajakariar
Gerard Rajakariar
Leonard (Lennie) and Lilamanie Rajakariar
Kingsley Rajakariar , Rohini and Rajaratnam, Ranjit and Bubbles Rajakariar, Nirmal Rajakarier and their families
Cecil and Saras Rajakariar
Mahesa Rajakariar, Charmaine and Vamadeva, Maureen and Anton Swampillai, Shirani and Mohan David, Shyamala and Anton Pillai and their families
Fr. Anton Rajakariar
Joy and Grace Rajakariar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Marie and Piyadasa Perera, Ranjana and Wesley Kanagaratnam, Jayantha and Rajie Rajakariar, Mallika and Joseph Hyginus, Nirmala and Lakshman Williams, Surendra and Rashmini Rajakariar, Patricia and Mohan Emmanuel, Umesha and Darshi Rajakariar, Manohar and Shiranthi Rajakariar and their families

Teresa (Mani) and Thomas.J.Savundranayagam

Anton and Rita Savundranayagam, Joseph and Nalayini Savundranayagam, Eileen and Ragu Martyn, Emmanuel and Shanthi Savundranayagam, Fr. Michael Savundranayagam, Helena and Nimal Rodrigo,Tommy and Sulogini Savundranayagam, Muriel and Raymond Paul and their families.

Fr. Joseph Rajakariar

Christie and Agnes Tambinayagam

Antoinette Jessa

Christeline and Francis Philip

Christina and Peter Jeyarajah, Christie and Carla Philips, Christine Philips and their families

Louis Tambinayagam

Aloy Tambinayagam

Freda and Nimal Vanniasinkam

(Children listed under Homer-Vanniasinkam)

Victor and TinyTambinayagam

Terence and Marie Tambinayagam

Adrian Tambinayagam, Allen Tambinayagam, Alistair Tambinayagam and their families

## Anthonypillai Saverimutto and Annanthasipillai Anne Cherubim

J M E Saverimutto, Maharanee Saverimutto, Beatrice Saverimutto

## F.R. and Asaipillai Sandrasagra

F.A. and Grace Sandrasagra

Vimala and Kumar Rajakarier

Rushika and Sooriyakumar, Geetha and their families

Sita and David Dominic

Arjuna Dominic, Suresh Dominic, Indrajit Dominic

Devika and Basil Rajakumaran

Satheesh Rajakumaran, Anandhi and Joe Williamson, Sharmalee and Brian Staebell, Selvarani and Casey Clark and their families

Vaneetha Chandrasoma

R.E.V and Thanganesam Sandrasagra

Theresa and Francis

Indranee and Mario Sittampalam

Tara and Benjamin

Iranganee and Satgunam

Marion

Lalitha and Ratnarajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Edward and Sue Ratnarajah, Lara, Natasha and their families
Vasanthi and Victor Neil Cherubim
(Child Listed under Victor Cherubim family)
Felicia and Worthington Rajasingam
Noeline and Uma Jeganathan
Kaysha and Arjuna and family
Anton and Shantha Sandrasagra
Prashan Sandrasagra, Pradeep and Shevanti Sandrasagra, Pravin Sandrasagra and family
Ajit Sandrasagra
A.P. Sandrasagra and Ethel Helen (Lennie)
(Children listed under H.A.P.Sandrasagra)
Leela and Christopher
Raja and Grace Christopher
Vinodini and Kanishka Bastiampillai, Suresh and Mathi Christopher and their families
Yves and Shanthini Christopher
Suvendrini and Craig Schumann and family
Sharathcumar (Sarathi) and Nalini Christopher
Roshan and Lara Christopher, Rajesh Christopher, Rajeev Christopher and their families

**Paul Sandrasagra**
**Anne Thangachchie Sinnatamby and S.M.P Vanderkoen**

Elsie and Felix Paul
Lallitha and Mather Surendran,
Dmitri and Kim Surendran, Nadesha and Herbie Herbert and their families
Delini and Herbert Weerasinghe
Nelani and Dave Gunawardene, Harita Weerasinghe, Ruani and Jeremy Gomez, Kshani and Lal Jayamaha, Carini and Gerard Victoria, Roshant Weerasinghe and their families
Kumar and Gloria Paul
Kumar (Jr) and Niranjala Paul, Romesh and Shankari Paul, Shehan and Roshini Paul and their families
Dinesh and Jeya Paul
Shamin and Mihiri Paul, Dinushi Paul and their families
Maharaja and Mabsie Vanderkoen
Charmaine and Ricky Mendis
Pradip Jayewardene, Rukshan Jayewardene, Amrik Jayewardene, Sanjiv Mendis and their families
Constance and Victor Cherubim
(Children listed under Victor Cherubim)
Hilda Vanderkoen
Beryl and Joseph Prince Cherubim
(Children listed under Joseph Cherubim)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**P.E.Francis and Mary Rajakarier**

Ruby and A.J.N Selvadurai

Wigna Selvadurai

Wiji and Kamini Selvadurai, Jayo and Liz Selvadurai, Ranju and Kumari Selvadurai, Kumar Selvadurai, Wimal and Annette Selvadurai and their families

F.P.R. and Patricia Selvadurai

Rohan and AnnMarie Selvadurai ,Niranjan Selvadurai and their families

Pearly and Bastiampillai

Joe and Savundari Bastiampillai

(Children listed under Constance and Joseph.N.Sandrasagra)

Josephine and Reggie Rajakarier

Deva and Rajeswary Rajakarier

Wiji Rajakarier, Ravi Rajakarier, Devika and Dushmantha Fernando, Dillip and Radhika Rajakarier,Suren and Aruni Rajakarier, Rajika and Rajivan Jesuthasan and their families

Ariam and Selvi Rajakarier

Osmund and Nidra Rajakarier

(Children listed under Prince Cherubim)

**James E. Nicholas and Cecilia Velichorpillai**

F.X.Nicholas and Gertrude Sophia Vanderkoen

Trixie Nicholas

Cyrilla Nicholas

Marcella and Aloysius Philip

Nandhi and James Pakiyanayagam and their families

Indri and Anton Swampillai and their families

Raj and Shanthi Philip and their families

Tilak and Laleetha Philip and their families

**Chellachie Sinnatamby and N Saverimuttu**

Nicholas and Sellamma Saverimuttu

Hector and Mary Saverymuttu

Indira and David Maddison, Manel and Gavin Tringham, Seth and Ruth Saverymuttu and their families

Cyril and Padmini Saverimuttu

(Children listed under Ruby Vanigasooriyar)

Alfred and Patricia Saverimuttu

Prem and Rajitha Saverimuttu, Kiruba and Juliana Saverimuttu, Shyamala and Camillus Pathmanathan, Sooriyakumar and Dilani Saverimuttu and their families

Ernest and Carmini Saverimuttu

(Children listed under Ruby Vanigasooriyar)

Edmund and Pearl Saverimuttu

Anna Saverimuttu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mary Saverimuttu (Sr. Sacred Heart)
Cecilia and Chelliah Sabapathy
Pearl and Kanniah Swaminathan

Theresa and Alexander Savundranayagam

Tom Savundranayagam, Kenneth and Maureen Sam, Meena and George Somanader, Randolph Savundranayagam and their families

Violet Swaminathan (Sr. Lourdes)

Valentine and Phyllis Swaminathan

Kingsley and Leena Swaminathan, Renton and Florence Swaminathan, Annesley and Deanna Swaminathan, Shirani Swaminathan, Sarojini and Peter Fernando, Tyrone and Cheryl Swaminathan, Mohan and Meena Swaminathan, Rohan and Marnie Swaminathan and their families

Gretchen and Anton De Rosairo

Imelda and Harold de Sayrah, Rajah and Marie De Rosairo, Veronique De Rosairo, Gretchen and Al Milliken and their families

Ida and Benedict Balasandiran

Emil and Nirmali Balasandiran and their family

Erin and Gregory Joseph

Eugene and Sharmini Joseph, Enakshi and Paul Wood, Hyacinth and Rathini Joseph

Leonie and Victor Fernandez

Bernadine and Anthony, Jenny and Prasanna, Wendy Fernandez and their families



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி மண் சிறக்கட்டும்



அருட்பணி.
மா.றேஜிஸ் இராசநாயகம்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் எல்லைக் கிராமமான கிளாலி மண்ணிலும் மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் பரந்து வாழும் எமது உறவுகள் எமது மண்ணுக்கே உரித்தான அன்பையும் ஒற்றுமையையும் விழுமியங்களையும் மாறிவரும் நவீனத்துக்குள் இழக்காமல் யுத்த அழிவுக்குப் பின்னரான எமது மண்ணின் எதிர்காலத்தை எவ்வாறு தக்கவைக்கலாம் என்பது குறித்து மண்ணின் மைந்தன் என்ற வகையில் எனது எண்ணங்களை இங்கு வரைகிறேன்.

இவ் வேளையில் எமது மண்ணின் பாரம்பரிய சிறப்பு அம்சங்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எமது மண்ணில் எவருடைய நன்மை தீமைகளுக்கும் அழைப்புக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் அந் நிகழ்வுகளில் கிளாலி மண் முழுவதுமே ஒரே குடும்பமாகப் பங்கேற்றுக்கொள்ளும். இது எமது மண்ணுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

எமது மண்ணின் கூட்டு வாழ்வு அதாவது ஒன்றுபட்ட வாழ்வு வரப்பிரகாசம் விதானையப்பா வினதும் பெரிய உபாத்தியாயர் என்று நாம் அன்பாக அழைக்கும் பிலிப்பையா உபாத்தியாயரினதும் அறிவுரைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு வாழ்ந்த அமைதியான ஊர். இதனால், காவல் துறையையோ நீதி மன்றத்தையோ அறியாத, அணுகாத ஊர் என்பது எமது மண்ணின் இன்னொரு சிறப்பம்சமாகும்.

மனித விழுமியங்களையும் பண்பாடுகளையும் கண்ணாகப் போற்றுகின்ற ஊர். எவரையும் 'நீங்கள்' அல்லது 'தாங்கள்' என்றே அழைப்பர். ஒவ்வொரு வீட்டிலும் வருவோர் இளைப்பாறும் வகையில் திண்ணைகள் இருந்தன. அவர்கள் போகும்போது படலைவரை சென்று 'சென்று வாருங்கள்' என்று கூறி அன்போடு வழியனுப்பும் வழக்கம் இருந்தது.

கலை வளங்களிலும் சிறந்திருந்த எமது மண் நாட்டுக்கூத்து விருத்தம் ஒப்பாரி போன்ற பாரம்பரிய கலை வடிவங்களில் சிறப்புப் பெற்றிருந்தது. அனைத்திற்கும் மேலாக இறை விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றி இருந்த ஊர். காலை 5 மணிக்கு நடைபெறும் ஞாயிறு திருப்பலிக்கு ஊரின் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லைவரை உள்ள மக்கள் அனைவரும் சென்று திருப்பலிக்கு முன்னர் திருச் செபமாலை சொல்வார்கள்.

நான் 1959ல் எனது தாய் மண்ணான கிளாலியிலிருந்து புறப்பட்டு எனது குருத்துவப் பணிகளுக்காகப் பல இடங்களுக்குச் சென்றாலும் எண்ணற்ற சிறப்புகள் வாய்ந்த எனது ஊரை நினைந்து உளப்பூரிப்பும் புழாங்காகிதமும் அடைவதுண்டு. ஆனாலும், மாறிவரும் நவீன உலகின் மாற்றங்களும் புலம்பெயர்வுகளும் தொழில்நுட்ப – நுகர்வு கலாசாரமும் முழு உலகின் எதிர்காலத்துக்கும் சவாலாக அமைந்துள்ள இன்றைய நிலை மனித விழுமியங்களில் – அன்பில் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பில் – அறிவில் – விசுவாசத்தில் – கூட்டுவாழ்வில் முன்னுதாரணமாய் திகழ்ந்த எமது மண்ணின் மக்களது எதிர்காலத்துக்கும் சவாலாகவும் அமைந்துவிடக்கூடாது என்பதே எனது பேரவா.

இன்றைய உலகில் பார்க்கும் இடமெல்லாம் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நிலை காணப்படுவதையும் அதனால் அடுத்த தலைமுறை தமது கலை, கலாசாரம், பண்பாடு, மதம், மனிதநேயம் உள்ளிட்ட மனித விழுமியங்களை மறந்து, மட்டுமீறிய நவீனங்களை அனுபவிக்கும் சுதந்திரத்துக்குள் தம்மை சிக்கவைத்து சீரழிவதைக் காண்கிறோம். நவீன இலத்திரனியலின் தவறான பாவனைகள், குடிவெறி, போதைவஸ்து, போட்டி பொறாமை, சண்டை சச்சரவுகள் ஊடாக மனித உறவுக்குள்ளே – குடும்பங்களுக்குள்ளே – தனிமனித வாழ்வுக்குள்ளே – சமூக வாழ்வுக்குள்ளே சீரழிவுகளை ஏற்படுத்தி மனிதத்தை மட்டுமன்றி மனித வாழ்வின் அடித்தளமான அன்பு, அரவணைப்பு, ஆன்மீகம் போன்றவற்றை சிதைத்துக்கொண்டிருப்பதையும் நாம் கண்ணாரக் காண்கிறோம்.

இந்த அவலநிலை எமது மண்ணின் மைந்தர்கள் எங்கு எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்குள் தொற்றிவிடாமல் காலம் காலமாய் கட்டிக்காத்த நமது மண்ணின் பாரம்பரியம் – பண்பாடு – விசுவாசம் – அன்புவாழ்வு – கூட்டுறவு போன்றவற்றின் அத்திவாரம் தகர்ந்துபோகாமல் பேணிக் காக்கவேண்டும். அந்த அத்திவாரத்தில் நமது மண்ணின் முத்திரை அழியாமல் பொறிக்கப்படவேண்டுமெனில், மண்ணின் ஒவ்வொரு மைந்தனும் நவீனங்களுக்குள்ளேயான தத்தமது இருப்பியலை சீர்தூக்கிப்பார்த்து அல்லவை களைந்து நல்லவை தெளிந்து அவற்றோடு பயணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எமது மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொருவரும் எந்தெந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்தந்த நாட்டின் கலாசாரம் பண்பாடுகளுக்குள் இணங்கிப் போகவேண்டியது தவிர்க்கமுடியாதது எனினும் அவை நமது மண்ணுக்கும் நமது கலாசாரத்துக்கும் ஊறுவிளைவிக்காதபடி விழிப்புடன் வாழ்வதன்மூலம் உலகம் போற்றும் தமிழ் மக்களின் விழுமியங்களை அந்தந்த நாட்டவர் கண்டு வியக்கவைக்கவேண்டும். இவ்வாறான நிலை இன்று பல்வேறு நாடுகளில் துளிர்விடத் தொடங்கியதும் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

மேலும், இன்றைய உலகின் நவீனத்துக்குள் ஆன்மீகமும் இறைவிசுவாசமும் தொலைந்துபோய்க்கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இந்நிலையைப் பயன்படுத்தி பல போலிச்சபைகள் உருவாகி ஒரு சில மனிதர்களின் சுய லாபத்துக்காய் உண்மை விசுவாசம் வேரறுக்கப்பட்டுக்கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. இத்தகைய போலிகளுக்குள் விழுந்து ஏமாந்து விடாமல் காலங் காலமாய் கட்டிக்காத்த உண்மை, இறைபற்று, இறைவிசுவாசம் என்பவற்றின் ஊடாக கிளாலி மண்ணில் பெரும் இறை அனுபவங்களை அனுபவித்த நாம் அந்த விசுவாச அனுபவங்களை மன உறுதியோடு எமது எதிர்கால சந்ததியினர்க்கு ஊட்டி தேவ அழைத்தலுக்குள் இயலுமானவரை நகர்த்தி நமது கத்தோலிக்க விசுவாசப் பரம்பரையின் பெருமையை வெளிக்கொணரவேண்டும். இவ்வாறு ஆன்மீகத்தின் உண்மைப் பாதைக்குள் நுழையும்போது உண்மை இறைவனுக்குள் நுழையும்போது 'என்னைத்தேடு சகலதும் உன்னைத்தேடும்' என்பதற்கொப்ப அனைத்து நன்மைத்தனங்களும் தாமாகவே நம்மை வந்தடையும் என்பதையும் இறையருளின் பாதையில் நமது மண்ணின் எதிர்காலமும் சிறப்புறும் என்பதையும் உணர்ந்து செயற்படவேண்டும்.

எனவே, பார்போற்றும் எமது கிளாலி மண்ணின் பாரம்பரியங்களை தொடர்ந்து கட்டிக் காக்க வேண்டியது எதுவோ, சரியானது எதுவோ, நல்லது எதுவோ அதுவாக நாம் மாறி நம்மையும் நமது மண்ணையும் மேன்மைப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலிக்கிராமம்



அமரர் பிரான்சீஸ். சென். றோச் (துரை ஆரோக்கியதாசன்)
B. A., Sp. Trd. Dip-in T.M, PGDE.
முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை

ஈழமணித் திருநாட்டில் மணிமுடியாகத் தெரிவது யாழ்பாணம். அங்கிருந்து கண்டி வீதி ஊடாக கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 18 மைல்கல் காட்டும் இடத்தில், எழுதுமட்டுவாழ் சிறிய புகையிரத நிலையம் உள்ளது. தெற்கு நோக்கி நேரானதெரு ஊடாகச்செல்லும் பொழுது, கண்கொள்ளாக் காட்சிகளைக்கண்டு இன்புறலாம். வீதியின் இருமருங்கிலும் பெரும் தென்னந்தோட்டங்களும், இடைக்கிடை நாவல்மரங்களும், வேப்பமரங்களும், ஆலமரங்களும், வானளாவ உயர்ந்திருக்கும் பனந்தோப்புக்களும், காட்டுப்பற்றைகளும், கிறிஸ்தவ, இந்துக்கோயில்களும், குளங்களும் வயல்புலமும் கடல் ஏரியும் இவற்றோடு அழகுக்கு அழகூட்டும் பாணியில் ஆத்மதோதி அருட்சகோதரர் சீ. அ. பிரான்சிஸ் S.S.J., BA., அடிகளின் சிலையும் உடைய இயற்கை வனப்புகளுடன் கிளாலிக் கிராமம் அமைந்துள்ளது.

**அம்மானை**

கிளாலி ஏரிக்கடற்கரையில் பழைமைவாய்ந்த புகழ்பூத்த சந்தியோகுமையோர் யாத்திரைத் தலமாகிய பேராலயத்தைக் காணலாம். இந்த புனிதரின் சரிதைகொண்ட அம்மானையை போர்துக்கேயரின் மொழியிலும், தமிழ் மொழியிலும் வல்லவரான தெல்லிப்பளைப் புலவர் பேதுறுப்பிள்ளை ஆக்கியுள்ளார். இது முதன்முதலாக எழுதப்பட்ட தமிழ் கிறிஸ்தவ நூல் என்ற பெருமைக்குரியது.

17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆட்சியில் யாழ்ப்பாணம் வந்த இயேசு சபைக் குருக்கள் இங்குள்ள மக்களுக்கு கத்தோலிக்க திருமறையை போதிப்பதற்கு முகமாலையில் கல்விவளாகம் ஒன்றை நிறுவி தமிழ் இலக்கிய முறையை பின்பற்றினார்கள். அந்த இலக்கிய முறைதான் அம்மானை, வாசகப்பா போன்றவை, ஈழத்தில் எழுதப்பட்ட நாடகங்களும், அம்மானைகளுக்கும் இந்நூல் அடிப்படையாக அமைந்துள்ளது என தமிழ்ப் பேரறிஞர் யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை 1991 இல் 1647 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நூலை மீள்பதிப்புச்செய்து கோடிட்டுக்காட்டியுள்ளார்.

வெள்ளைப் பறங்கியர் (போத்துக்கேயர்) தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்பு அளிக்கும் "ழ" எனும் உச்சரிப்பை உச்சரிப்பதற்கு கடினமாக இருந்தமையினால் கிழாலி என்ற சொல் மருவி கிளாலி (கிள் ஆலி) என வந்திருக்கலாம். போத்துக்கோயர் காலத்தில் கிளாலியூர் சனநடமாட்டமிக்க நகரமாகவும், கடற்பிரயாணத்தின் முக்கிய கேந்திர இடமாகவும் யாத்திரைத் தலமாகவும் இருந்தபடியால் கீர்த்தி பெற்ற ஊராக கிளாலி இருந்தது என்பது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழார் - தோட்டம்,

கிழாலை – களர்நிலம்,

கிழாலி = கிழ் + ஆலி,

ஆலி – ஒலிபெருக்குதல்

இங்கு தோட்டமும், கடல் ஏரியுமிருக்கிறபடியால் கிழாலி பின்னர் கிளாலி என்றானது.

## கிளாலி சந்தியாகுமாயோர் பேராலயம்

போர்த்துக்கேயரின் காலத்தில் கி.பி. 1620-1628இல் அடியிடப்பட்டதாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அங்கிருக்கும் வாடி வீட்டின் அத்திவாரம் ஒரு சுவையான பாரம்பரியக் கதையைக் கூறுகின்றது. போர்த்துக்கேய தளபதி பூநகரியிலிருந்து யாழ்ப்பாண கோட்டைக்குச் செல்லும்வேளை கிளாலி வாடியில் சில இரவுகளில் தங்கிச்செல்வது வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில் தளபதி இரவுவேளை அந்த வாடியில் தங்குவதற்கு ஆயத்தம் செய்தவேளை சந்தியோகுமாயோரிடம் மன்றாடுவது வழக்கம் தெய்வாதீனமாக புனிதரின் அசரீரி வாக்குக்கிடைக்கப் பெற்று வேறு இடத்தில் உறங்கி உயிர் பிழைத்ததாகவும் அதற்கு நன்றிக்கடனாக இக்கோயில் எழுந்ததெனவும் அவ்வூர்முன்னோர் கூறுவர். இக்கோயில் ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியில் இது எழுச்சிபெற்றது. இவ்வாலயமிருந்த முன்றலிலுள்ள வயலில் உழுதுகொண்டு போகும்வேளை சிறிய கூட்டுடன் சந்தியோகுமாயோரின் மரச்சிலையை சோறிஸ் (Soris) எனப்படும் பரவக்குலத்தைச்சேர்ந்தவர் கண்டெடுத்து பனையோலையால் சிற்றாலயத்தை நிறுவி அதில் புனிதரின் மரச்சுரூபத்தை வைத்து வழிபட்டுவந்தனர் என்ற கதை உண்டு. கி.பி. 1740 இற்குமுன்பு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த திருகோணமலையைச் சேர்ந்த ஒரு பறங்கி இன அம்மையார் அளித்த நிதியைக் கொண்டு இப்பேராலயம் கட்டப்பட்டது.

## தொல்பொருள் முக்கியத்துவமுடைய மூன்று பொருட்கள்

1. குதிரையின்மேல் அமர்ந்துள்ள சந்தியோகுமையோரின் சிறிய மரச்சொரூபம்.
2. அதன் மாதிரி உருவம்
3. போத்துக்கேயரின் வாசகத்தைக்கொண்ட புனிதரின் மூன்று மூலையுள்ள பொன்னாலான தொப்பி

கிளாலிக்கிராமத்தில் இவ்வாலயம் இருந்தாலும் இதன் உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சந்திரசேகரா, செரூபின், ஹோமர் வன்னியசிங்கம், இராஜகாரியர் குடும்பத்தினர். இவர்களது முன்னோர் கி.பி.1782 இல் கிளாலிக்கடல் ஏரிக்கூடாக பிரயாணம் மேற்கொண்ட பொழுது உயிர் ஆபத்து ஏற்பட்டு சந்தியோகுமையோரின் அற்புதத்தினால் காப்பாற்றியதையொட்டி அன்றுதொட்டு இச்சந்ததியினர் இக்கோயிலை பரிபாலித்து வந்தார்கள் என்பது வரலாறு.

## ஈழத்தின் முதலாவது கத்தோலிக்கத்தேர்

இது முதலாவது சித்திரத்தேர் என்ற மகிமைக்கும் பெருமைக்குமுரியது. இத்தேர் நீக்கிலஸ் சந்திரசேகராவால் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. கி.பி.1834இல் இது கிளாலியிலிருந்ததாக சைமன் காசிச்செட்டி குறிப்பிடுகிறார். (Simon Casie Chitty Ceylon Gazetee Pp 142) இங்கு ஆண்டுதோறும் ஆடிமாதம் 25ஆம் திகதியில் சந்தியோகுமாயோரின் பெருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. கிளாலிப் பகுதியிலுள்ள உள்ள சிற்றாலயங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலராகவிருக்கும் புனிதர்களின் திருசுரூபங்களும் ஏழு சரவலைக்கூடுகளும் தமிழ்க்கலாச்சார அடிப்படையில் இப்பேராலயத்தை தரிசிப்பது யாத்திரிகர்களை பக்திப்பரசவத்தில் ஆழ்த்துவதாகும்.

**புனித மரியாள் ஆலயம்**

இதுவும் இங்கு இருக்கும் ஏனைய ஆலயங்களும் ஆரம்பத்தில் பெரும்பாலும் தென்னோலைக் கூரை கொண்ட சிற்றாலயங்களாகும். இவை ஒன்றுக்கொன்று மிகஅண்மையில் அமைந்துள்ளன. இவ்வாலயத்தை ஆதரிப்போர் மிருசுவிலில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். புனித மரியாள் ஆலயம் ஆரம்பத்தில் ஒரு தனியாரின் காணியில் இருந்தது, காலப்போக்கில் காணிச்சொந்தக்காரர் காணியை கோயிலுக்கு கொடுக்க மறுத்ததால் கி.பி.1595 இல் வண.ஜே.ஹிப்பொலிற் சுவாமியார் மிசனுக்குரிய காணியில் புதிதாக இவ்வாலயத்துடன் புனித மரியாள் றோ.க.த.பாடசாலை, உப அஞ்சல் அலுவலகம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வாசிகசாலையும் அனுமதிக்கப்பட்டதுடன் அயலில் வேறு சில தனியார் கடைகளும் இருந்தன.

**புனித மிக்கேல் ஆலயம்**

கிளாலிக்கடற்கரையில் ஒரு சுந்தரவடிவமான மரஅலுமாரிக்குள் புனிதமிக்கேல் மரச்சுரூபம் இந்தியாவிலிருந்து வந்தடைந்ததென பாரம்பரியக் கதை உண்டு. அவ்வேளை இத்தாவில் (வில்-தோட்டம்) முருகன் கோயிலைச்சேர்ந்த சில உறவினர்கள் கிளாலியில் வாழ்ந்தனர். இவர்கள் போர்த்துக்கேய ஆட்சியில் கத்தோலிக்க சமயத்தைத்தழுவி தமிழ்ப்பற்றும் இறைபற்றும் கொண்டு புனித மிக்கேல் ஆலயத்தை அமைத்தார்கள். கோயில்மரத்தூணில் இவ்வாலயம் கி.பி. 1785இல் உருவாக்கப்பட்டதென நல்லூர் சுவாமிஞானப்பிரகாசர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் முதலாவது கிளாலி கிராம விதானையார் திரு.மி.சீமான்பிள்ளை. இவருக்கு இருபுத்திரர்கள் மூத்தவர் திரு.சீ.இறப்பியல் இக்கோயிலின் உபதேசியார். இளையவர் அருட்சகோதரர் சீ.அ.பிரான்சிஸ் S.S.J., B.A. அடிகள். இவர் இக்கிராமத்தின் முதல் துறவியாவார். பங்குத்தந்தை வண. L. ஜோசப் O.M.I. அடிகளின் காலத்தில் கிளாலி சமய, சமூக, கல்விப்பணியில் துரித முன்னேற்றமடைந்துள்ளது. 1973இல் இக்கோயிலில் யாழ். ஆயர்மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட குருமணி அருட்தந்தை M.R. இராசநாயகம் M .Phil. இவரது சகோதரர் திரு.M.பாக்கியநாதன் M.A.(Ed.) முதலாவது கல்வி முதுகலைமாணிப் பட்டதாரி. இவரின் சகோதரி இக்கிராமத்தின் முதலாவது திருக்குடும்ப கன்னியர் சபைத்துறவி அருட்செல்வி M. அன்ரனீற்றா H.F., இவரினது மருமகள் முதலாவது அப்போஸ்தலிக்க கார்மேல்சபைக்கன்னியாஸ்திரி, அருட்செல்வி ஜேக்கப் சிறியபுஷ்பம் A.C., கிளாலியில் முதலாவது பாடசாலை அதிபர் என்ற மகிமைக்கும் பெருமைக்குமுரியவர் திரு.அந்தோனிப்பிள்ளை அல்பிரட்.

கிளாலி புனித மிக்கேல் ஆலயத்தில் அரைநூற்றாண்டிற்குமேல் ஆண்டுதோறும் ஆவணிமாதம் 16ஆம்திகதி புனித ஆரோக்கியநாதரின் பெருநாள் சீரும்சிறப்புமாக நடைபெற்றுவந்துள்ளது. இதற்குமுன் இரவு சரவலைக்கூட்டில் புனிதரின் சிலை பவனிவருவதும் மேளதாளங்களுடன் பக்திப்பாக்களை இசைப்பதும், மின்சாரவசதி அறவேயில்லாதிருப்பினும் தீப்பந்தங்கள் சரவலைக்கூட்டை புடைசூழ குடையின்கீழ் புனித ஆரோக்கியநாதரின் சிலை வலம் வரும் காட்சி பக்தர்களை பரவசமூட்டும். விழா முடிந்ததும் வாணவேடிக்கை நடைபெறும். இச்சிலையை உருவாக்கியவர் கலைஞர் ச.பி.துரையப்பா. இவரின் இளையமகன் 5 வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூர நோயுற்றிருந்தவேளை மகனின் பாதுகாவலரான ஆரோக்கியநாதரின் அற்புதத்தினால் உயிர்பிழைத்தார். அன்றுதொட்டு இக்குடும்பத்தினரும் கிளாலியில் இக்கோயிலில் இவ்விழாவை நடாத்தி வந்தார்கள்.

சந்தணமர அடிவேர் கூட எரிந்து சாம்பலாகும் வேளையில் கூட நறுமணம் குன்றாதிருக்கும் என்பதற்கு சான்றாக காலத்திற்கு காலம் இக் கோயிலை சேர்ந்த மக்கள் புலம்பெயர்ந்தாலும் அவர்களின் நற்பணிகள் மடிவதில்லை. அந்தக்காலத்தில் கிளாலியூரில் யாக்கோபு சாமுவேல் எனும் கனவான் ஒருவர் இருந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபுக்கள் குடியிருப்பு (கி.பி.1540 யாழ் வரைபடத்தில் இப் பெயர் உள்ளது) தற்பொழுது சுண்டிக்குளி என அழைக்கப்படும் சஞ்சுவாம் கோவிலடியிலுள்ள மேரி தங்கம் மங்கையை மணந்தார். இவரே சஞ்சுவாம் கோவிலின் முதல் மூப்பரும், கட்டிடக் கலையில் பெரும் பணியாற்றினார். இவரின் பேரன் ஈழத்து முதலாவது அணுக்கரு விஞ்ஞானி டாக்டர் M. A. V தேவநாதன் D.Sc.(Lond.) இவர் இலங்கை இரசாயன றோயல் கழகத்தின் முதலாவது தலைவர் என்ற புகழாரம் பெற்றார்.

### கிளாலி புனித அந்தோனியார் ஆலயம்

கோடி அற்பதரின் "நா" இன்றும் அழியாது இருக்கின்றது. பொதுவாக அந்தோனியார் ஆலயம் கடற்கரைக்கு அண்மையில்தான் கோவில்கொண்டிருக்கும். ஆனால் கிளாலியில் இக்கோயில் மரியாள் ஆலையத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் தீராந்தியொன்றில் கி.பி.1827 இல் நிறுவப்பட்டதாக பொறிக்கப்பட்டுள்ளது. சிறு தொகையான குடும்பத்தினர் இக் கோயிலை ஆதரித்து வருகின்றனர்.

### புனித சவேரியார் ஆலயம்

ஒட்டுவெளி புனித சவேரியார் ஆலயமக்கள் பலர் கொலரா என்ற நோயினால் மடிந்தார்கள். உயிர் தப்பிய சிலர் பழைமை வாய்ந்த புனித சவேரியார் சுரூபத்தையும் எடுத்துக் கொண்டு வந்து கிளாலி புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த தம் உறவினருடன் வாழக்குடியேறியது மட்டுமன்றி அச்சொரூபத்தையும் அவர்களது ஆலயத்தில் வைத்து வழிபட்டுவந்தனர்.

### புனித செபஸ்தியார் ஆலயம்

மேற்படி கோயிலுக்கு அருகிலிருந்த புனித செபஸ்தியார் சிற்றாலயம் தீப்பற்றி எரிந்தபொழுது, தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்ட புனித செபஸ்ரியார் சுரூபத்தை புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்து கிராமத்தவர் வழிபட்டு வந்தனர்.

புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆண்டுதோறும் மூன்று புனிதர்களின் திருவிழாக்கள் நடைபெறுவதுடன், இன்றும் இவ்வாலயத்தில் மூன்று சரவலைக்கூடுகளிருந்ததைக் காணலாம். இக்கோயிலைச் சேர்ந்தவர் கிளாலியின் முதலாவது உப அஞ்சல் அதிபர் திரு.அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ். இவரது மகள் செல்வி.S. நீற்றாமேரி அவர்கள் இக்கிராமத்தின் முதலாவது பலாலி ஆசிரியர் கலாசாலையில் விஷேட பயிற்றப்பட்ட கிறிஸ்தவ ஆசிரியை.

### புனித தோமையார் ஆலயம்

இவ்வாலயம் 20ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் நிறுவப்பட்டது. திரு.மோசஸ் குடுப்பத்தினர் நாவாந்துறையிலிருந்து கிளாலியில் குடியேறி அங்கு மீனவத் தொழிலைச் செய்து வாழ்ந்தது மட்டுமின்றி இச்சிற்றாலயத்தின் உரிமையாளர்களுமாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளாலி புனித வியாகுலமாதா செபக்கூடம்**

இதனை 1961-04-28இல் திரு.கி.மி.சூசைப்பிள்ளையின் வளவில், இவரின் மருமகன் திரு. பிரான்சீஸ் மைக்கல் அவர்கள் நிறுவி அன்றுதொட்டு இன்றுவரையும் பராமரித்துவருகிறார், இலவசமாக பக்தர்களுக்கு பணிசெய்துவருகிறார். கிளாலிப்பதியில் வண. A.S. சிங்கராயர் O.M.I. அடிகளினால் புனித வியாகுலமாதா சிலை ஆசீர்வதிக்கப்பட்டு வழிபாட்டுக்கு வைக்கப்பட்டது. இச்சிலை அமரர் கலைஞர் ச.பி. துரையப்பாவின் ஞாபகார்த்தமாக அவரின் மூத்த மகனால் நிறுவப்பட்ட இறுதி நினைவுச்சின்னமாகும். ஆண்டுதோறும் பெரியவெள்ளியில் இங்கு வழிபாடு நடைபெறும். அங்கு கூடும் பக்தர்களின் பெருங்கூட்டமே வியாகுல அன்னையின் புகழுக்கு சான்றுபகரும்.

**கிளாலி இந்துக்கோயில்கள்**

நாச்சிமார், வீரபத்திரர், பிள்ளையார், ஐயனார் கோயில்களின் தர்ம கர்த்தாக்கள் கிளாலி தென்னந்தோட்ட உரிமையாளர்கள். ஆண்டு தோறும் அங்குள்ள இந்துமக்களும் தோட்டச்சொந்தக்காரரும் சேர்ந்து விழாக்களை கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர். 1995இல் அங்குள்ள குடிசனம் 1000பேர் இவற்றில் 75% கத்தோலிக்கர் 25% இந்துக்கள். கிளாலியில் கோயில்கள் பல ஆனால் குடிகளோ சில.

**கல்வி:- புனித மரியாள் றோமன்கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை**

இது தற்பொழுது இருக்கும் கத்தோலிக்கமிஷனுக்கு சொந்தமான காணியில் ஏறக்குறைய கி.பி.1880இல் தென்னோலைக் குடிசையில் புனித மரியாள் திண்ணைப்பாடசாலையாகவிருந்தது. பின்னர் 1895இல் பங்குத்தந்தை வண. ஜே.கிப்பொலிற்சுவாமிகள் பாடசாலை வளவிற்குள் புதிய புனித மரியாள் சிற்றாலயத்தை கட்டினார். அத்துடன் சுவாமிகள் கடும்முயற்சியால் ஆரம்பப் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளைச்செய்தார். யாழ் மறைமாவட்டத்தின் 5வது ஆயர் மேதகு கலாநிதி என்றி யூலன் O.M.I. ஆண்டகை காலம் தொடக்கம் 1962இல் அரசு பொறுப்பு ஏற்கும் வரை இப்பாடசாலை மிஷனரியின் பொறுப்பிலிருந்தது. கஷ்டமான சூழ்நிலையில் கிளாலியில் கடமையாற்றிய உபாத்தியர்களில் சிறப்பாக சூசைப்பிள்ளை, லூயிஸ், அன்ரனிப்பிள்ளை, அரியமலர், பொன்மணி ஆகியோரின் உயர்ந்த நிலையில் வைத்து நன்றிபெருக்குடன் முதியோர்கள் அவர்களின் தியாகப்பணியைப் பாராட்டுகிறார்கள்.

1978 - 1988 வரை இப்பாடசாலையின் வரலாற்றில் பொற்காலம் (golden era) என வர்ணிக்கப் படுகின்றது. இக்கால கட்டத்தில் கிளாலியூரின் முதலாவது அதிபராக திரு. அ. அல்பிரட் அவர்களும் அவரின் துணைவியார் செபமாலையம்மா ஆங்கில உதவி ஆசிரியையாகவும் இருந்து ஆற்றிய சேவைகளாலும் ஏனைய 16 ஆசிரிய பெருமக்களின் தியாகப்பணிகளாலும் இப்பாடசாலை கல்வி, விளையாட்டு, கலைநிகழ்ச்சிகளில் உன்னத வளர்ச்சியும், எழுச்சியும் அடைந்தது. இங்கு 300 மாணவ மாணவிகள் கல்வி கற்றார்கள். இப்பாடசாலையில் பௌதீக வளங்கள் விரிவடைந்தது. பல சவால்கள் மத்தியில் அதிபரின் உந்துசக்திமிக்க ஆளுமையினால் பாடசாலை உயர்ச்சியடைந்தமையை இவர்களிடம் கல்வி கற்ற பழைய மாணவர்கள் இவர்களை நன்றிப்பெருக்குடன் நினைவு கூருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளாலி ஊருக்குப் புகழாரம் சூட்டிய மும்மூர்த்திகள்.**

**கிளாலி சமூக சோதி அமரர் வஸ்தியாம்பிள்ளை வரப்பிரகாசம் விதானையார்**

இவரிடம் அன்புக்கரமும் அதிகாரமும் இருந்தும் மனிதநேயம் மிக்கவராக 35 வருடங்கள் பணிபுரிந்து முடிசூடா மன்னராக திகழ்ந்தார். இவரின் வாழ்க்கை புகழ்பூத்ததாக திகழ துணைவியார் ஆரோக்கியம்மாவே மூல காரணம். இவர் அரசபணியில் இருந்து ஓய்வு பெற்ற பொழுது இவரது சேவையைப் பாராட்டி யாழ் அரசாங்க அதிபரினால் தங்கப்பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். வடமாகாண விதானையார் சங்கத்தலைவராகவும், தமிழ் பண்பாட்டுத் திலகமாகவும், விவசாய மன்னராகவும், கிராம அபிவிருத்திச் சங்கம் பயிர்ச்செய்கைக்குழு சனசமூக சேவை போன்ற பல முக்கிய பதவி வகித்தும் இவர் பெரும் பணிபுரிந்துள்ளார். கிளாலி சந்தியோகுமாயோரின் பேராலய நிர்வாக அதிகாரியாகவும், உபதேசியாகவும் கௌரவ சேவை புரிந்துள்ளார். இவர் புகழ்பெற்ற அண்ணாவியார், இவர் மேடையேற்றிய பல நாடகங்களில் சிறப்பாக மத்தேயு, பாரம்மா, யூதகுமாரன், தர்மபிரகாசன் போன்ற பல நாடகங்களை எழுதி கிராம வாசிகள் நடிக்கவும், பாடவும் வைத்த பெருமைக்குரியவர். மேலும் சிறந்த இசைவிற்பனராகவும், சமூக சோதியாகவும் இவர் திகழ்ந்தார்.

**கிளாலி ஆத்மசோதி அமரர் அருட்சகோதரர் சீ. அ. பிரான்சிஸ் SSJ, BA அடிகள்.**

இவர் 05.01.1981 இல் குருநாகலில் நடைபெற்ற கோரப்புகையிரத விபத்தில் அமரத்துவம் அடைந்தார். இவர் கல்விமானும், கல்லூரி அதிபரும், புனித வளன் துறவறசபை உயர்தலைவரும், மட்டுநகர் புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளராகவும் இருந்து பணிபுரிந்தார் என்பதைப்பற்றி 06.01.1982 இல் வீரகேசரி செய்தித்தாளில் கலாநிதி க.சொக்கன் இவரின் ஓராண்டு நினைவு அஞ்சலிக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில் சாந்தமே வடிவான அடிகள் கோபித்ததை நான் கண்டதேயில்லை, உடனாசிரியராய் கற்றனில் நான் அவரோடு கற்பித்த காலத்தை மறக்க முடியாது. தாமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் கத்தோலிக்க துறவிகளிடையே அவர் தனிப்பட்ட போக்கும் கம்பீரமும் நிறைந்தவராய் தோன்றினார். கிளாலி மண்ணின் மைந்தன், இவர் மனித நேயம் மிக்கவர், இவர் அன்புப் பணிக்கு தியாகம் செய்த அருங்குணச்சான்றோன் எனப் புகழாரம் சூட்டினார்.

**மங்கையர் திலகம் பிரான்சீஸ் துரையப்பா றோசலீன் அம்மா.**

இவர்களில் இருந்து மரத்தை அறிவது போல கிளாலி யாக்கோபு கணக்கரின் ஏகபுதல்வி தினகரன் 18.08.1981 இல் இவரைப்பற்றி வெளிவந்த அஞ்சலி நினைவுக் கட்டுரையில் றோசலீன் அம்மாவின் 8வது புத்திரி அருட் செல்வி மேரி மக்டலீன் பிரான்சீஸ் RGS, அவர்கள் துறவியாகி முதல் வாக்குத்தத்த பாராட்டு விழா யாழ் சுண்டுக்குழி சஞ்சுவாம் கோயில் முன்றலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வேளை யாழ் மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சாமிநாதர் JP, அவர்கள் ஆற்றிய உரையில் கிளாலி யாக்கோபு கணக்கர் காலத்தில் செல்வந்தராக இருந்தும் சமூக சமய பணிகளுக்கு இலைமறை காயாக தம்செல்வத்தை பெரிதும் செலவிட்டார் எனப் புகழாரம் சூட்டினார். இதனை மீள நினைவூட்டி றோசலீன் அம்மாவின் இரங்கல் உரையில் அருட்சகோதரர் சீ.அ.பிரான்சிஸ் அடிகள் கூறியபோது தந்தையின் குணங்கள் யாவும் நிறையப் பெற்றவர் றோசலீன் அம்மா இவர் ஆன்மீக வாழ்வில் ஆழமான ஈடுபாடுடையவர். இவர் தருமசீமாட்டி மட்டுமல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுவோருக்கு அன்புக்கரம் நீட்டி அரவணைத்தவர். இவர் யாழ் குடா நாட்டில் இலவசமாக 40 இளைஞர் யுவதிகளை திருமணத்தில் இணைத்து வைத்தவர். இவர் இல்லாத கல்யாணவீடோ, சாவீடோ சரியாக இயங்கமாட்டா. சாவீடுகளில் இவரின் ஒப்பாரியை கேட்போர் பெரும் ஆறுதல் அடைவர். இவரின் பேரன் அண்ணாவி ஞானப்பிரகாசம் போன்று பக்திப் பாடல்களை இசைப்பார். கிளாலியூரை தன்னுயிருக்கு உயிராக நேசித்த மங்கையர் திலகம் இவராவார்.

## கிளாலி கிராமிய பொருளாதாரம்

தேசிய மரபாகிய பனையும் தென்னையும் கிளாலி கிராமவாசிகளின் வாழ்க்கை வளம்பெறச்செய்யும் அரும்பெரும் பொக்கிஷமாகும். பனைமரம் கற்பகதரு எனப்புகழப்படும் இதிலிருந்து உணவும் உறைவிடமும் பெறுகிறார்கள். கூலிக்குத் தோட்டங்களில் வேலைசெய்து தம் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வர். இங்குள்ள ஒவ்வொருவருக்கும் குறைந்தது 4 ஏக்கர் காணி இருந்தது. ஒவ்வொன்றிலும் ஒரு துரவு இருக்கும். இங்குள்ள கிராமவாசிகள் தம்வளவில் தென்னம்பிள்ளைகளையும், கனிதரும் மரங்களாகிய மா, பலா, வாழை, மாதுளை முதலியவற்றை வளர்ப்பதோடு கால்நடைவளர்ப்பு, கோழிவளர்ப்பு, கிராமிய குடிசைக்கைத்தொழில் ஆகியவற்றிலும் ஈடுபடுவர். இங்கு சிறிதுகாலம் பெண்கள் தும்புக்கைத்தொழிலில் ஈடுபட்டனர். நாவற்குழி அன்ரசன் இறால் பதனிடும் தொழிலகத்தின் தூண்டுதலால் சிறிதுகாலம் இறால்பிடிக்கும் தொழில் கூடிய வருமானத்தை அளித்தது. தென்னந்தோட்டத்தையும், விவசாயத்தையும் நம்பியிருந்த இளம் சந்ததியினர் பணவாசைகொண்டு பாரம்பரிய தொழிலைக்கைவிட்டு. மீன்பிடியிலும், வள்ளம் ஓட்டுவதிலும் ஈடுபட்டனர். ஈழப்போரினால் கிளாலிஏரி புகழ்பூத்த கேந்திர நிலையமாக சிறிதுகாலம் மாறியிருந்தது.

## உணவு

பனங்காய்ப்பலகாரங்களும், ஒடியற்கூழ், ஒடியல்ப்பிட்டு, பனாட்டு, பாணிப்பனாட்டு, கருப்பநீர், கருப்பங்கஞ்சி, பனங்கிழங்கு, நுங்கு, பனங்காய், புழுக்கொடியல், பனங்களி முதலியனவும், அரிசிமாப் பலகாரங்களும் ஏனைய அரிசிமாப் பண்டங்களும் இவர்களின் உணவுகளாகும்.

## ஒடியற்கூழ் தயாரிப்பு

'தாலபுரபோசனம் சலரோக விமோசனம்' என பொன்னாலை கிருக்ஷ்னபிள்ளையின் கூற்று. பானையில் நீர் ஏற்றி கொதிக்கவிட்டு காய்கறிகள், கிழங்குவகைகள், சிறப்பாக பயிற்றங்காய், பாவற்காய், மரவள்ளிக்கிழங்கு இவற்றுடன் விரும்பியோர் மீன், இறால், நண்டு, கணவாய், திருக்கை முதலியவற்றை அளவாக இட்டு உப்பையும் ஓரளவு இட்டு இவை நன்றாக வெந்து அவிந்து வரும் வேளையில் சுத்தமாக்கி எடுத்த ஒடியல் மாவுடன் ஓரளவு புளி, அரைத்த மிளகாய் ஆகியவற்றை நீர்விட்டு கரைத்து உலையில் விட்டு துளாவி அசைவ உணவுகளை எடுத்து ஒரு சட்டியில் இட்டு அகப்பையால் நசித்து பின் இறக்கித் தாளிதஞ் சேர்த்துச் சுடசடசுடக் குடிப்பதில் சுகம் தரும் உணவு. வள்ளுவர் பனையையே உவமானமாகக் கூறியுள்ளார். பனை செய்யும் நன்றியுபகாரம் சொல்லிலடங்காது.

**தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்**

**– திருக்குறள் 104**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழுதுபோக்கு

கோடையில் ஆண்கள் கடினமாக உழைப்பார்கள், மாரிகாலங்களில் விவசாய வேலைகள் இல்லாத வேளையில் குழுக்களாக ஒன்றுகூடி கலைநிகழ்ச்சிகளில் சிறப்பாக நாடகம், கூத்து ஆகிய பயிற்சியில் ஈடுபட்டார்கள். சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் தேசிய விளையாட்டுக்களில் ஓய்வுநேரபொழுதைச் செலவழித்தார்கள்.

## பழக்க வழக்கங்கள்

பெண்கள் வீட்டிற்குவரும் விருந்தினரை முகம் மலர அகம் குளிர வரவேற்று உபசரிப்பார்கள். விருந்தினர் அல்லது ஏனையோர் புறப்படும்போது வருகிறேன் அல்லது போய் வருகிறேன் என்று சொல்லியே செல்வதும் வீட்டக்காரர் படலைவரை சென்று வாருங்கள் – போய் வாருங்கள் என புன்முறுவலுடன் வழியனுப்புவதும் மரபு. சினம் வந்தாலும் கனம் குறைய பேசக்கூடாது இது உடல் உள தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் வாழ்க்கையில் அநுபவரீதியாக கடைப்பிடிப்பர். கிளாலி வாசிகளின் உரையாடலில் மாதா, குரு, தெய்வம் அவர்களை தினம் தினம் வணங்குதல் செய்வோம் என்பதற்கு இவர்கள் இலக்கணமாக திகழ்ந்தார்கள். நீ என்பது சமநிலையான வயதிற்கு குறைந்தவரையும், நீர் என்பது ஒத்தவயதுடையோரையும், நீங்கள் என்பது பெரியோரையும் தாங்கள் என்பது உயர் மரியாதைப் பண்பையும் சுட்டிக்காட்டுகின்றது என்பதை இவர்களின் உரையாடலில் இருந்து அறிந்தோம்.

வீடுகளில் மஞ்சள், வேப்பம் இலைகளை தொற்றுநீக்கியாக உபயோகிப்பர். புதுமனை புகுவிழாவிற்கு மஞ்சளையும் மங்களப்பொருட்களையும் சேர்த்துக்கொள்வர். புதிய வேட்டி கட்டு முன் நுனியில் மஞ்சள் பூசுவர். வீட்டுமண்சுவரில் வெள்ளையடித்தபின் புதுவருடதினத்தில் மஞ்சள் தெளிப்பர். இரவு வேளையில் உணவுப் பொதிகளை வெளியில் எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பு கருதி கரித்துண்டு அல்லது இலையினால் சிறுகுருசு வைப்பர். காடுகளில் இரவில் பிணங்கள், பழங்கள், மிருகங்கள் இறந்து அழுகிப்போயிருந்தால் அதிலிருந்து வெளிவரும் வாயு (மெதேன்) வளிமண்டல காற்றுடன் உராய்வடைந்து தீச்சுவாலை காற்றடிக்கும் பக்கம் இழுத்துச் செல்லும், இதைக்கண்ட அப்பாவிக் கிராமவாசிகள் கொள்ளிவாய் பசாசு எனப்பயந்து சிலர் இரத்தக்கொதிப்பினால் சடுதியாக இறந்துள்ளனர். இந்துக்கள் குழந்தைகளுக்கு தம் தெய்வங்களின் நாமங்களை சூட்டுவர். கத்தோலிக்கர் தம்குழந்தைகளுக்கு திருமறை அடியாளர்களின் நாமங்களை திருமுழுக்குச்சடங்கு கோயிலில் நடைபெறும்பொழுது சூட்டுவார்கள். 20ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் கிளாலியில் தற்போது பொதுவாக ஆன்மீக நாமங்கள் விடப்பட்டு நவீன மோடியில் அர்த்தமற்ற சனி, பினி, சினி என்று நாமங்களை சூட்டுகிறார்கள். கிளாலி மீண்டும் வளம்பெறுமா?

ஈழப்போரினால் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 1995இல் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைவரை கிளாலி பாரிய சேதத்திற்குள்ளாகியது. அதன் சோகக்கதையை வர்ணிக்க வார்த்தைகளேயில்லை. உயிரைக் கையில்பிடித்தவாறு புலம்பெயர்ந்த கிளாலிக்கிராம வாசிகள் தம் மண்ணில் மீள்குடியேற ஈழத்தில் சமாதானம் மலரும் நாளையும் நாளிகையையும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். காலம்தான் பதில் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளை மீட்டுகையில்....



அருட்சகோதரி. ஜொய்லின்றாஜி ஸ்ரான்லி
திருக்குடும்ப கன்னியர் மடம்,
D 8, உருத்திரபுரம்
கிளிநொச்சி

ஒரு பிரதேசத்தின் வாழ்வுக்கும் வளமுக்கும் நிலவளம், நீர்வளம் எவ்வளவு முக்கியமோ அதே போன்று மக்களின் வாழ்வுக்கும் உறவுக்கும், அன்பிற்கும், பண்பிற்கும், ஒழுக்கத்திற்கும் ஆணிவேராக அமைவது ஆலயங்கள் என்பதில் ஐயமில்லை. ஒட்டுமொத்தமாக மதம் என்பது மனிதனை நல்வழிப்படுத்தவே உருவாக்கம் பெற்றது என்பது பலரின் பொதுவான கருத்தும், கணிப்பும்.

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்கின்ற ஒரு முதுமொழி இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. இந்த முதுமொழியின் அர்த்தத்தை நிறைவாக வாழ்ந்த ஒரு அழகான கிராமம் தான் எமது கிளாலி.

பார்க்கும் திசை எங்கும் ஆலயங்களினாலே சூழப்பட்ட எமது கிராமத்தின் அழகு ஒரு தனி அழகு. இரம்மியமான தென்றலின் மலர்ப் படுக்கையிலே தென்னங்கீற்றுக்களின் கீத இசையினிலே, வயல்வெளியின் மதுர கானத்திலே, பொன் போன்ற நெற்கதிர்களின் வடிவிலே புள்ளினங்களின் வாய் இசையினிலே, வானளாவிய பனையின் நிமிர்ந்த இருப்பினிலே, கடல் அலையின் தாலாட்டிலே தவழ்ந்து துள்ளும் மீனினங்களின் அசைவினிலே, கொஞ்சிக் குலாவும் எமது கிராமம்.

கத்தோலிக்க திருச்சபையின் புனிதர்களின் சமூக உறவை நம்புகின்றேன் என்னும் நம்பிக்கை அறிக்கையை ஒரு கிராமம் முழுவதுமாகவே கடைப்பிடித்திருக்கின்றது என்றால் அது கிளாலி என்றால் மிகையாகாது. பல புனிதர்களின் பாதுகாப்பிலும் பரிந்துரையிலும் அழகான ஆலயங்கள் அமைந்து வாழ்ந்து வந்த மக்களின் வாழ்வு விசுவாசத்தின் அடித்தளம் எனலாம்.

இந்த பல புனிதர்களின் அரவணைப்பிலே ஒரு புனிதர் கடற்கரையிலே எழுந்தருளி நிற்கும் காட்சி கண்கொள்ளா காட்சியாகும். அதுதான் சந்தியோகுமையோர் என்கின்ற புனித யாகப்பர். அந்த ஆலயத்தின் இருப்பும், வனப்பும், பார்ப்போரை கொள்ளை கொள்ளும் அழகும் மறக்க முடியாதவை.

அங்கே ஒரு தேர் பவனி இருக்கும். இப்போது கூட நெஞ்சிலே அன்பொழுக நினைவு கூரப்படும் ஒரு அழகான நினைவு. பவளரதத்திலே பக்குவமாகவும், கம்பீரமாகவும் இருக்கும் புனித யாகப்பரை காண பல்லாயிரம் மக்கள் கூடுவார்கள். தடம் பதித்து வரும் தேரை இழுப்பதற்காக முண்யடிக்கும் மக்கள் கூட்டத்தின் நடுவிலே ஒரு விசுவாசக் காற்று வீசும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைகளினாலே மிகவும் பிரபல்யமான இந்த புனிதரின் தேர்ப்பவனியைப் பார்க்க கடல் அலைபோல் மக்கள் கூடுவார். தீராத நோய்கள் கண்டவர்கள் பலர் இந்த ஆலயம் நாடி தேடி வருவதைக் கண்டோம். துன்பங்கள், வேதனைகள், தொல்லைகள், துயரங்களால் வாழ்வில் வாடிய பலர் இங்கே செபிப்பதைக் கண்டோம். தீய ஆவிகளினாலே பீடிக்கப்பட்டோர் நலமாகத் திரும்பியதையும் கண்டோம். வல்லமையின் ஆண்டவரின் உடனிருப்பு, அவருக்காக இரத்தம் சிந்தி மரித்த இந்த புனிதரின் வாழ்வோடு இந்த ஆலயத்தை வலம் வந்ததையும் கண்டோம்.

நாங்கள் சிறுபராயம் தொட்டே எமது பெற்றோரோடு புனித யாகப்பரின் ஆலயம் தேடி கால்நடையாக வருவோம். நவநாட்கள் தொடங்கிவிட்டால் கிளாலி கிராமமே மகிழ்ச்சியால் துள்ளும். அப்போது சிறுவர்களாக இருந்த எமக்கு இந்த ஆலயம் வருவது என்றால் கொள்ளை ஆனந்தம். நவநாட்களிலே ஒருநாள் நாங்கள் எல்லோரும் கோவில் காவல் செய்வோம். அதாவது ஒரு முழுநாள் நாங்கள் கோவிலிலே இருந்து செபிப்போம். குறிப்பாக திருச்செபமாலை சொல்லி புனிதரின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து அவருக்கான பிராத்தனையைச் சொல்லி பல பாடல்களும் பாடுவோம், அப்படி ஒருநாள் செபத்திலே இருப்போம்.

எங்கள் அப்பாவிற்கு இந்தப் புனிதரின் பெருவிழா நாட்கள் விசேட நாட்களாக அமையும். முதல்நாள் தொடங்கி இறுதிநாள் வரைக்கும் ஆலயத்தின் செயற்பாடுகள் அனைத்திலும் அவர் தன்னால் முடிந்த ஒத்துழைப்பைக் கொடுத்த வண்ணமே இருப்பார். அதற்கு காரணம் இந்தப் புனிதரிலே கொண்டிருந்த நம்பிக்கை.

இந்த வேளையில் ஒரு உண்மை நிகழ்வு எனக்கு ஞாபகம் வருகின்றது. அன்று புனித யாகப்பரின் தேர்ப்பவனி நாள். எங்கள் உறவுகள் சொந்தங்கள் என்று எல்லோரும் இந்த அழகான காட்சியைக் காண வந்தார்கள். திடீர் என ஒரு சோகமான செய்தி, எங்கள் உறவினர் இடையே பெரும் சலசலப்பை ஏற்பட்டுத்தியது. யாரோ உறவினர் ஒருவர் மருந்து குடித்து ஆபத்தான நிலையில் இருப்பதாக எனது செவிகளுக்கு எட்டியது.

இந்த ஆபத்தான நிலை, அங்கு அவர் உயிருக்காக போராட்டிக் கொண்டிருக்கின்றார். அனைத்து உறவுகளும் வாகனத்திலே புறப்படுவதற்கு ஆயத்தமான நிலை அப்பா மட்டும் புனிதர் யாகப்பரின் தேரின் வடத்தோடு புனிதரை பார்த்த படியே தேரை பலரோடு சேர்ந்து இழுக்கின்றார்.

'உன்னுடைய நெருங்கிய உறவினர் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ளான்' என்ற செய்தி அவருக்குக் கொடுக்கப்பட்டது. 'அவனுக்கு ஒன்றும் நடக்காது அவன் உயிரோடு இருப்பான், யாகப்பர் பாத்துக் கொள்ளுவார்' இது அப்பாவின் பதில்.

வாகனத்திலே இருந்த எல்லோருமே அப்பாவை திட்டினார்கள் உடனே வரும்படியாக, ஆனால் அவரே 'நம்பிக்கையோடு தானே இங்கே வந்தீர்கள் ஏன் நம்பிக்கை இல்லாமல் பேசுறீங்க! யாகப்பர் காப்பாற்றுவார் அவனை' என்று ஒரு விசுவாசப் பரப்புதல் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ப்பவனி முடிந்த பிற்பாடே அப்பா வந்தார் வாகனம் சென்றது. வைத்தியசாலையில் வைத்தியர்கள் அவன் ஆபத்தான கட்டத்தை தாண்டி விட்டதாகவும் உயிர் பிழைத்து விட்டான் என்றும் கூறினர்.

அப்போது அப்பா 'இதுதான் யாகப்பரின் புதுமை, இதுவே எனது நம்பிக்கை' என்று மற்றவர்களிடம் இந்த புனிதரை பெருமைப்படுத்தினார்.

இது எமது குடும்ப வாழ்வில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். இதைப் போலவே பல்லாயிரம் மக்கள் பல்வேறு புதுமையின் சாட்சியத்தைச் சொல்வார்கள். அந்த அளவிற்கு பிரபல்யமானவர்தான் எமது அன்பான புனிதர் யாகப்பர்.

இந்த மகிழ்வான தருணத்திலே புது பொலிவு பெற்று துலங்கும் இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அன்று தொட்டு இன்றுவரை அரும்பாடுபட்டு செயற்படும் உறவுகளுக்கு நன்றி கூறுவதோடு, நாங்கள் கட்டிக்காத்த விசுவாசம் தளர்வுறாமல் மென்மேலும் உயிரோட்டமுள்ளதாக தளைத்து வளர இறைவனை வேண்டுவோம்.

என்றும் எம் புனிதர் எங்களுக்காக தொடர்ந்து தனது இடைவிடாத பரிந்துரையால் காத்து வழிநடத்தவும் வேண்டும்.

ஆசியுடன் நன்றியையும் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலியூர் புனித சந்தியோகுமையோர் ஆலய திருவிழாக்கால நிகழ்வுகளில் மறக்கப்பட்ட வரலாற்றுத்துளிகள்.



**மா. பாக்கியநாதன்.**
கொழும்பு (கிளாலி)

400 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட கிளாலியூர் புனித சந்தியோகுமையோர் ஆலயத்தின் திருவிழாக்கால நிகழ்வுகளில் முக்கியம் வாய்ந்த நிகழ்வுகளில் ஒன்றுதான் புனிதர்களின் ஏழு கூட்டுப்பவனியாகும்.

இந்நிகழ்வு எமது இலங்கைத்திரு நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகு முன்னரே மறைந்த மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களினால் சில நியாயமான காரணங்களினால் தடைசெய்யப்பட்டது.

அந்நாட்களில் கிளாலியூர் கிராமத்தில் இரு மதத்தவர்கள் மாத்திரமே வாழ்ந்தனர். அவர்கள் கத்தோலிக்கர்கள் மற்றையது இந்துக்கள் ஆவர். புனித சந்தியோகுமையோர் ஆலய திருவிழா என்றால் இரு மதத்தவர்களுக்குமான திருவிழாவாகவே கருதிப் பங்குகொள்ளும் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

**ஐந்து கோவில்கள் ஏழு கூடுகள் எவ்வாறு?**

வெளியூரில் இருப்பவர்களுக்கு கிளாலியில் திருச்சபையின் அங்கீகாரம் பெற்ற ஐந்து கோவில்கள் இருக்கும் போது ஏழு கூடுகள் எவ்வாறு என்பது ஒரு கேள்விக்குறியாகும். புனித அந்தோனியார் கோவிலில் புனிதர்களான அந்தோனியார், சவேரியார், செபஸ்தியார் ஆகியோருக்கென ஒரே கோவிலில் மூன்று கூடுகளும், புனித கண்மணி மாதா, புனித தோமையார், புனித மிக்கேல், புனித சந்தியோகுமையோர் ஆகிய ஆலயங்களில் முறையே ஒவ்வொரு கூடுகளுமாக மொத்தம் ஏழு கூடுகளே அவையாகும்.

**ஏழு கூடுகளின் பவனி**

புனித சந்தியோகுமையோர் ஆலயத்திருவிழா ஆரம்பித்து எட்டாம் நாளன்று யூலை 23ம் திகதி நடைபெறுவதுதான் ஏழு கூடுகளின் பவனியாகும். அத்தினத்தன்று சுமார் பிற்பகல் 4.00 மணிக்கும் 5.00 மணிக்குமிடையில் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து மூன்று கூடுகளின் பவனி ஆரம்பமாகி புனித கண்மணி மாதா ஆலயத்தை வந்தடையும்போது அத்தேவாலயத்தைச் சேர்ந்தவர்களும் ஏனையோரும் அந்தோனியார் ஆலயத்திலிருந்து வரும் புனிதர்களின் கூட்டுப்பவனியை வரவேற்பதுடன் புனித கண்மணி மாதாவை தாங்கிய கூட்டுப்பவனியுடன் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித தோமையார் ஆலய பக்தர்களின் வரவேற்புடன் புனித தோமையார் கூட்டுப்பவனி இணைந்து புனித மிக்கேல் தேவாலயத்தை வந்தடையும். புனித மிக்கேல் தேவாலய மக்களின் வரவேற்புடன் புனித மிக்கேல் கூட்டுப்பவனி இணைந்து புனித சந்தியோகுமையோர் ஆலயத்தை வந்தடையும்.

கூடுகளின் திருப்பவனி ஆரம்பித்து சென்று கொண்டிருக்கும்போதே இருள் சூழ ஆரம்பமாகி விடுமாகையால் பெற்றோல் மாக்ஸ் ஒளி விளக்கும், தேங்காய் எண்ணையில் எரியும் தீப்பந்தங்களும் ஏந்திய வண்ணம் பவனி தொடரும் காட்சியானது அந்நாட்களில் எல்லோர் மனதையும் கவரும் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு பவனி நடைபெறும் வேளைகளில் பாடப்படும் விருத்தங்கள், பவனிப்பாடல்கள் என்பவற்றுடன் கூடிய பறை மேள, மத்தள வாத்தியங்கள் மனதுக்கும், இதயத்திற்கும் இனிமையூட்டும் பரவச நிகழ்வுகளாகும்.

இவ்வாறாக புனித சந்தியோகுமையோர் ஆலயத்தை புனிதர்களைத் தாங்கிய கூடுகள் வந்தடைந்ததும் வழமையான திருநாள் ஆராதனைகள் நடைபெறும். அவ்வாறு நடைபெற்ற பின்னர் சந்தியோகுமையோர் திருச்சுரூபக் கூடு முன்செல்ல ஏனைய கூடுகள் வரிசையாக கோவிலின் வெளிப்புற கிழக்குப்பக்க வயல்களினூடாகச் செல்லும் தற்காலிக பாதையினூடாக கிளாலி பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து தெற்குப்புறத்திலுள்ள கடற்கரை வழியை அடைந்து பின்னர் வலது புறமாக அமைந்த பவனி வழியாக மீண்டும் ஏழு கூட்டுப்பவனி புனித சந்தியோகுமையோர் ஆலய முன்றலைச் சென்றடையும்.

இப்பிரதான பவனியின்போது புனிதர்களைக்குறித்த விருத்தங்கள், பவனிப்பாடல்கள் என்பன பறைமேள, மத்தள வாத்தியங்களுடன் சகல கோவில்களைச் சேர்ந்தவர்களாலும் ஒழுங்குமுறையில் பாடப்படுவதும், கூட்டாக பக்கப்பாட்டுப் பாடுவதும் கிராமத்தின் ஒற்றுமையை மேலும் மெருகூட்டும் நிகழ்வாகும்.

இவ்வாறாக புனித சந்தியோகுமையோர் கோவில் முன்றலில் ஏழு கூடுகளின் பவனி நிறைவு பெற்றதும் அங்கிருந்து விடைபெறும் நிகழ்வு ஆரம்பமாகும். இதற்கமைய புனித சந்தியோகுமையோர் ஆலயத்தை வந்தடைந்த ஏனைய ஆறு புனிதர்களின் கூடுகளும் வந்த ஒழுங்கிலேயே அதே பவனி ஒழுங்குடன் ஒவ்வொரு ஆலயத்திலிருந்தும் விடை பெற்றுச் செல்வதும், விடைபெற்றுச் செல்பவர்கள் அந்தந்த ஆலயத்தைச் சேர்ந்தவர்களால் வழி அனுப்பி வைக்கப்படும் நிகழ்வுடன் ஏழு கூட்டுப்பவனி இனிதே நிறைவேறும்.

இவ்வாறான பாரம்பரியமாக நடைபெற்றுவந்த ஏழு கூடுகளின் பவனி சில காரணங்களுக்காக ஆரம்பத்தில் தடைசெய்யப்பட்ட நிலை தொடர்ந்தும் நீக்கப்படாமல் இருப்பது இப்பகுதி வாழ் இறைமக்களின் மனங்களில் பெரும்கவலையை ஏற்படுத்தி நிற்கின்றது. இதனை யாழ் மறைவாவட்ட நிர்வாகம் தமது கவனத்தில் கொண்டு எமது பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்படவும் அதனூடாக இறைமக்கள் மத்தியில் விசுவாசம் மேலும் தழைத்தோங்கவும் வழிவகை செய்யவேண்டும் என்பது எமது பணிவான வேண்டுகையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கிராமத்தின் நினைவுகளுடன்....



அருட்சகோதரி. மரிய விஜித்தா
அப்போஸ்தலிக்க கார்மேல்சபை
பண்டாரவளை

அது ஒரு அழகிய தேசம்....
நிலவின் மடியிலே நிரந்தரமாக
குடியிருக்கும் கிராமம்....
மனிதர் முதல் விலங்குகள் வரை
நிம்மதியாக வாழும் கூடு....
தென்றல் காற்றினில் உறங்கும் நாடு....
கலங்களின் அணிவகுப்பிலே
கடல் அன்னையின் பொழுதுபோக்கு!
நிலமகளின் நெஞ்சிலே உரிமையோடு
ஏறி நிற்கும் பனையும், தென்னையும்....
பச்சை நிறத்தின் வயல்வெளியை
பார்த்திருக்கும் போதே
பொன் நிறத்தின் நெல் மணிகள்
பூத்துக்குலுங்கும்....

அங்குள்ள ஆலயங்களின்
அழகோ தனியழகு!
கம்பீரமாக எழுந்துநிற்கும்
புனிதர்களின்
திருச்சுரூபத்தின் அடியிலே
ஆன்மீகத்தின் கொட்டில்கள்....

மாவும், பலாவும், வாழையும்
கொஞ்சிக் குலாவும் இருக்கை....
பனை மரத்தின் ஒவ்வொரு கனியையும்
தெட்டம் தெட்டமாக ருசி பார்க்கும் மாந்தர்கள்
தென்னை தரும் சுகத்திலே
வாழ்வை வளமாக்கும் மனிதர்கள்

மாடும் ஆடும் அற்புதச் செல்வங்களாகி
ஆயுள் கொடுக்கும் அமுதமாகின....
ஏழை எளியவர் குறை கண்டு
கொடுத்தே வாழும் ஒரு குதூகலம்....
விருந்து என்றால் கிராமமே கூடிவிடும்
மகிழ்வு என்றால் மனத்தால் ஒன்றுபடும்
சோகம் என்றால் ஊரே அருகிருக்கும்....

வேற்றுமைகள் இல்லாத
ஒற்றுமையின் பிறப்பிடம்
வேறுபாடு காட்டாத
ஒருமித்த சகோதர பாசம்
இவற்றின் மொத்த வடிவமே
எம் அழகிய கிராமம் கிளாலி

வாழ்க்கைப் பாடல் கற்றுத் தந்த
எம் பாடசாலை ஒன்று....
வரலாறு சொல்வதைப் போல
எழுந்து நிற்கும்....
மாலை விளையாட்டின் மயக்கத்திலே
மறக்காமல் நினைவிலிருக்கின்ற
நாங்கள் துள்ளிக் குதித்து
நீச்சலடித்த தாமரைக் குளம்....

இவ்வாறு எமது கிராமத்தின் அழகை வர்ணித்துக் கொண்டே போகலாம். இவ்வாறான ஒரு அழகிய கிராமத்திலே வாழ்க்கை அமைத்து வாழ்ந்த எம் கிராம மக்களின் வாழ்க்கைக் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல. சந்தோசங்கள், நிறைவுகள், மகிழ்வுகள், துக்கங்கள், போராட்டங்கள், இடப்பெயர்வுகள் என பலவற்றை கடந்து வந்தது எம் கிராமம்.

இவை அனைத்துக்கும் ஈடுகொடுத்து, நிலைத்து நின்று இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றால் அவை எம் சமயங்கள், கோவில்கள் கற்றுத் தந்த ஆன்மீகம் என்று சொன்னால் மிகையாகாது.

அந்தவகையில் மிகவும் பழமைவாய்ந்ததும், வரலாற்று சிறப்புமிக்கதும், புதுமைகள் பல நிறைந்ததுமாய் விளங்கும் ஆலயம் எமது சந்தியோகுமையோர் ஆலயம். எனது வாழ்விலே விரும்பிச் செல்லும் ஆலயமாகவும் இது விளங்குகின்றது. எனது குடும்பத்தினருக்கும் இவ்ஆலயப் புனிதர் மிகவும் விருப்பத்துக்குரியவராக விளங்குகின்றார்.

எனது வாழ்வில் நான் குறிப்பிடத்தக்க புதுமைகள் எவற்றையும் அனுபவிக்கா விட்டாலும் எனது தந்தையின் வாழ்வில் நடந்த புதுமை, வாய்வழியாக எமக்கும் கடத்தப்பட்டமையால் என் வாழ்வும் இப்புனிதரின் ஆசீர்வாதத்தால் நிறைந்துள்ளது. ஆழமான பக்தியும், பயமும் இவரில் எனக்கு உண்டு. இதனால் இந்த புனிதரின் திருத்தலம் நோக்கி நாம் பவனி செல்வோம்.

அந்தவகையில் ஒரு நவநாள் காலம். நாம் கோவிலில் தரித்திருந்து, விழித்திருந்து செபம் செய்து கொள்ள ஒருநாளை ஒதுக்குவோம். அவ்வாறே எமது மாலை செபத்தை எல்லாம் முடித்து விட்டு, சாப்பிட்டோம். அதன் பின் நாம் படுக்கைக்கு சென்றுவிட்டோம். எனது தந்தையார் தனது மிகுதிச் செபங்களை எல்லாம் முடித்துவிட்டு, படுப்பதற்கு முயற்சித்தார்.

அவரது படுக்கைக்கு அருகில் புனித சந்தியோமையோரின் தேர் இழுக்கும் வடம் (கயிறு) சுற்றப்பட்டு இருந்தது. எனது தந்தை படுக்கை விரிப்பை விரித்துவிட்டு, தலையணைக்கு பதிலாய் அந்த வடச் சுற்றில் தலையை வைத்து தூங்க முயற்சித்த போது அவரால் ஒரு சிறுமணிப்பொழுது கூட நித்திரை செய்ய முடியவில்லை. "எழும்பு, எழும்பு" என்று யாரோ கூறுவது போல் கேட்டு எழுந்து உட்காந்தார். பின் எவற்றையும் காணவில்லை. மீண்டும் படுக்க முயற்சித்த போது முடியவில்லை. இவ்வாறு பல தடவைகள் முயன்றும் தந்தை தோற்றுப் போனார். நித்திரை அற்ற இரவாகவே அந்த இரவு அவருக்கு அமைந்தது. அவரின் கருத்துப்படி அது சந்தியோமையோரே அவ்வாறு, தன்னை இழுக்கும் கயிற்றில் படுக்க வேண்டாம். என்று தடுத்தார் என கூறுவார். காரணம் அடுத்த நாள் தேருக்கு அந்த வடத்தின் சுற்றை களைந்த போது பெரிய பாம்பு ஒன்றை கண்டார்கள். அது ஒரு பெரிய புதுமை அப்பாவின் வாழ்வில் இது அவருக்கு வெளிப்படுத்திய செய்தி மட்டுமல்ல எம் குடும்பத்தினர் அனைவருக்கும் விடப்பட்ட செய்தி என்றே கொள்ளுகின்றோம்.

அத்துடன் புனித பண்டங்களை நாம் புனிதமாக பாவிக்க வேண்டும். அவற்றையெல்லாம் சாதாரண பொருட்களாக நாம் பார்க்க கூடாது என்பதும் அதன் செய்தி என எமக்கு கற்றுக்கொடுத்தார்.

இப்புனிதருக்கு என ஒரு புதிதான ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு திறக்கப்படும் தருணத்தில் இப் புனிதரின் புதுமையை எண்ணி வியந்து பாடும் தருணத்தில் அதை இம் மலரிலே பதிய வைப்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இப்புனிதரின் பரிந்துரை தொடர்ந்து எம் கிராமத்துக்கு கிடைக்கவும் அன்றைய நாள் அனுபவங்களை மீண்டும் மீட்டிப் பார்க்கும் போது இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். புனிதமான, அழகான, அனுபவங்களின் ஊடாக ஆண்டவர் என் வாழ்வையும் புடமிட்டிருக்கிறார். உருவாக்கியிருக்கின்றார். தொடர்ந்தும் அவரின் அன்புப் பணியில் இணைந்து பயணித்து அவரை மகிமைப்படுத்த அவரது புகழ் என்றும் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் யாத்திரைத் தலமும் கிளாலி மக்களின் விசுவாச வாழ்வும்



அ.அகஸ்ரின்
ஆசிரியர்

நெய்தல் நிலமும் மருத நிலமும் இணைந்து காணப்படும் இருமதங்கள் சேர்ந்துவாழும் எம் கிராமம் கிளிநொச்சி மாவட்ட எல்லையாம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலி என்னும் நாமம் கொண்டதாகும். கடல்நீர் ஏரியும் வயல் நிலங்களும் தென்னந்தோப்புக்களும் பனங்கூடல்களும் கிராமத்தின் அழகை மிகைப்படுத்தி நிற்கின்றன. இங்கு கத்தோலிக்க பாரம்பரியங்களை எடுத்துக்கூற ஐந்து கத்தோலிக்க ஆலயங்களும் சிறிய வியாகுலமாதா செபக்கூடமும் இந்து சமயத்தைப் பிரதிபலிக்க இந்து ஆலயங்களும் மக்களை ஆன்மீகத்தில் வளர்த்து வருகின்றன. பலதரப்பட்ட சமூகமக்களும் தமது வசதிக்கேற்றற்போல் தமது தொழிலை மேற்கொள்கின்றார்கள். தமது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை மேற்கொள்ளும் மக்கள் குடும்பங்களும் உழவுத்தொழிலையும், விவசாயத்தொழிலையும் மேற்கொள்ளும் குடும்பங்களும் அன்புறவுடன் வாழ்கின்றார்கள். கத்தோலிக்க விசுவாசத்தில் தளர்வுறாது நம்பிக்கையுடன் வாழ இவர்களை மேலும் வளர்க்க இங்குள்ள கத்தோலிக்க ஆலயங்கள் சான்றாக அமைகின்றன. இவ்வகையில் கிளாலி புனித யாகப்பர் யாத்திரைத் தலம் முக்கிய சான்றாகும். 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட இப்புனிதரின் ஆலயத்திற்கென்றே ஓர் தனிப்பெருமை உண்டு. இந்த ஆலயம் பற்றி ஆராயுமிடத்து சில முதியவர்களிடம் கேட்டறிந்த விடயங்கள் மற்றும் எமது வயதிற்கு அறிந்தவகையில் இந்த ஆலயம் எவ்வாறு புகழ்பெற்றது என்பதுபற்றி சிலவற்றை ஆராய்வோம்.

ஆடி மாதம் பிறந்தாலே எம் கிராமத்திற்கு கொண்டாட்டம் தான். வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் களைகட்டும், யாத்திரிகர்கள் தமது புனித யாத்திரையை ஆரம்பிக்கத் தொடங்குவார்கள். யாழ் மாவட்டத்தின் நாவாந்துறை, பாசையூர், மணற்காடு, யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இருந்து மக்கள் தமது யாத்திரைப் பயணங்களை ஆரம்பித்து இங்குவந்து விடுதிகள் அமைத்து ஆலயத்தின் அருகாமையில் தங்குவார்கள். ஆலயத்திற்கு உரியவர்கள் வெளிநாடுகளில் இருந்தும், கொழும்பில் இருந்தும் வந்து தமது இல்லங்களில் தங்கி புனிதரின் விழாவை சிறப்புறக் கொண்டாடுவார்கள். அவர்களின் பங்கு முக்கியமானதாகும். திருவிழாவை மெருவூட்ட மிட்டாய் கடைகளும், மணிக்கடைகளும், பழங்கள், பாய்க்கடைகள், பனங்கட்டிக் கடைகள் போன்றன ஆலயத்தின் அயலில் உள்ள வயல்வெளிகளை நிரப்பிவிடும். நவநாள் கொடியேற்ற நாளில் இருந்து இலங்கை போக்கு வரத்து சபையின் பஸ்களும் ஏனைய தனியார் வாகனங்களும் தமது போக்குவரத்து சேவையை மேற்கொள்ளும். இங்கு சிறப்பு அம்சம் என்னவென்றால் எம்மக்களின் விசுவாசத்திற்கு சான்றாக இங்கு ஏழு கூடு எடுக்கும் வழிபாடு காணப்படும். ஆடிமாதம் 23ம் திகதி இது நடைபெறும். புனித யாகப்பர் தமது பதியில் இருந்து புறப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அந்தோனியார் ஆலயம் சென்று அங்குள்ள புனிதர்கள் புனித அந்தோனியார், புனித சவேரியார், புனித செபஸ்ரியார் போன்றவர்களின் உருவம் தாங்கிய கூடுகளில் அப்புனிதர்களை அழைத்து வந்தபின் கண்மணிமாதா ஆலயம் வந்து மாதாவைத்தாங்கிய கூட்டையும் அழைத்து தோமையார் ஆலயம் வந்து தோமையாரையும் அழைத்துக்கொண்டு புனித மிக்கேல் ஆலயம் வந்து புனித மிக்கேல் தூதரின் கூட்டுடன் எல்லாமாக ஏழு கூடுகளும் மத்தள தாளம் முழங்க வலம் வரும் காட்சி கண்ணைக் கவர்வதுடன் பழைய பாரம்பரியங்களையும் விசுவாசத்தையும் மக்களின் நம்பிக்கையும் எடுத்து இயம்பும். பின்னர் 24ம் திகதி வேஸ்பர் ஆராதனை நடைபெறும். ஆராதனை நிறைவடைந்ததும் பின் புனித யாகப்பர் தேரில் ஏறி வலம் வருவார். பக்த அடியார்கள் தேரின் வடக்கயிற்றில் பிடித்து பாரம்பரியப் பாடல்கள் பாடி தேரை இழுப்பார்கள். தேர் ஏறி பவனிவரும் புனித யாகப்பரின் தெய்வீகப் பயணம் மக்களுக்கு நிறைந்த வரங்களை அள்ளி வழங்கும்.

மீண்டும் மறுநாள் காலை 25ம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக நடைபெறும் பின் புனிதரின் ஆசீர்வாதம் இடம்பெறும். இத்துடன் திருவிழா நிறைவடையும். பல்வேறுபட்ட பாரம்பரியங்களைக் கொண்ட எமது கிராமம் காலத்திற்கு காலம் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் போது முற்றிலும் அழிவடைந்தது. குறிப்பாக யாழ்தேவி இராணுவ நடவடிக்கையினால் கிராமம் முற்றாக அழிவுக்குள்ளானது. குடா நாட்டிற்கான பாதைகள் தடைப்பட்டபோது கிளாலிக்கடல்நீர் ஏரியின் ஊடாக வன்னிக்கு மக்கள் செல்ல வேண்டிய பாதையாக மாறியது. பாரிய இடம்பெயர்வு ஏற்பட்டபோது இதுவே வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் செல்லும் பாதையாகியது. இக்கால கட்டத்தில் இக்கிராமம் இங்குள்ள ஆலயங்கள் எல்லாம் மக்கள் தங்கியிருக்கும் முகாங்களாகவும் காணப்பட்டது. பல தடவைகள் விமானக்குண்டு வீச்சுக்களிலும் இந்த ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டன. முற்றாக மக்கள் வெளியேறிய பின்னர் மக்கள் ஒருவரும் இல்லாத வெறும் சூனியப்பிரதேசமாகியது. இராணுவத்தினரைத் தவிர வேறு யாரும் செல்லமுடியாத பிரதேசமாகியது. அப்போதுதான் யாகப்பர் ஆலயத்தின் வரலாற்றுச் சின்னமான அழகிய தேர் அழிவடைந்தது. மக்கள் கிராமத்தில் 2011ம் ஆண்டு விடுவிக்கப்பட்டபோது சுடுகாடு போன்று காணப்பட்ட கிராமத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். அப்போது புனிதருக்கு விழா எடுக்க ஆரம்பித்தார்கள். பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் அக்காலப்பகுதியில் பங்கில் பணியாற்றிய அருட்பணி பத்திநாதர் அடிகளார் உதவிப்பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்பணி யஸ்ரின் அடிகளார் இவர்களின் அளப்பரிய சேவை மகத்தானது. தொடர்ந்து பணியாற்றிய அருட்பணி ஜெயரஞ்சன் அடிகளார், அருட்பணி ஜேம்ஸ அடிகளார், தற்போது பணிபுரியும் அருட்பணி இருதயதாஸ் அடிகளாரின் சேவையும் உன்னதமானதாகப் போற்றப்படுகின்றது. கிராமத்தில் உள்ள அனைத்து ஆலய மக்களின் ஒத்துழைப்பும் நிறைவானதாகும். பழைமையடைந்த இந்த ஆலயத்தின் பகுதிகள் மீளகட்டியெழுப்ப முடியாத நிலையிலும் வரலாற்று சின்னமாகவும் காணப்படுவதனால் அதனை அப்படியே விட்டு புனிதருக்கு புதிய ஆலயம் அமைக்க வேண்டும் என்று தீர்மானித்து பல்வேறுபட்டவர்களின் நிதிப் பங்களிப்புடன் அனேகரின் உடல்உளப் பங்களிப்புடனும் புதிய ஆலயம் அமைக்கப்பட்டது. இந்த ஆலயத்தைச் சேர்ந்த வெளிநாட்டு உறவுகளின் பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக அருட்பணி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளின் பங்கு முக்கியமானதாகும். எமது ஆயர் எமது பங்குத்தந்தை கிராமத்துக்குருக்கள் அனைவரையும் இவ்வேளை நினைவில் கொள்வோம்.

வெண்புரவி மீதேறி வெற்றி கொண்ட புனித யாகப்பரின் பெயர்கொண்ட இந்த யாத்திரைத் தலமானது எமது கிராமத்திற்கு பெருமை தருகின்றது. அத்துடன் வரலாற்றுச் சான்றாகவும் அமைகின்றது. மக்களின் விசுவாசத்திற்கும் சான்றாகும். இறையேசுவில் விசுவாசம் கொண்டு புனிதரின் பரிந்துரையில் தொடர்ந்தும் இறைவனிடம் வரம் வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி என் விசுவாசத்தின் பிறப்பிடம்



(வசந்தி யாக்கோப்பு)
**Sr. M. Siriya Pushpam A.C**
Principal, Holy Cross Maha Vidyalayam,
Sorikalmunai, Kalmunai

நிமிர்ந்து எழுந்து பரிணமிக்கும் தென்னஞ் சோலைகள்
அதன் நடுவில் பளிச்சிடும் முற்றம் கொண்ட வீடு
பால் நிலவின் ஒளியில் தம்பி தங்கையர் புடைசூழ
ஒவ்வொரு இரவிலும் ஓர் புனிதரின் கதை
சினிமா காவியத்தை விட மனதில் பதியும்
எம் பெற்றோரே எங்கள் முதல் மறையாசிரியர்கள்
தொலைக் காட்சியுமில்லை இணையமோ இறுவட்டோ இல்லை
ஆனால் கேட்ட கதைகள் மனதில் மறக்க முடியவில்லை.

மிருசுவில் இருந்து நேரம் தவறாத பங்குத் தந்தை
ஆலயம் பக்தர் கூட்டத்தால் நிரம்பி வழியும்
கதிரவன் கதவு திறக்கும் முன்னமே காலை ஐந்து முப்பது
கோவில்கள் ஐந்து சந்தியோகுமையோர் தலம் ஒன்று
திருவிழாக்கள் மறை போதனைகள் மகா ஞான ஒடுக்கம்
அருட்சாதனங்கள் எல்லாம் விசுவாசத்தின் வித்துக்கள்.

என் அனுபவ அத்தியாயத்தில் எனக்கு வயது ஏழு
சந்தியோகுமையோர் ஸ்தலம் திருவிழா கொள்ளும் காலம்
யூலை 24 மாலையில் முல்லை மண்ணில் வாடகைக்கு ஓர் கார்
சொன்ன கார் வரவில்லை சோகமே முகங்களில்
இரவு இன்னொரு காருடன் எம் தந்தை
விரைந்தோம் கிளாலிக்கு
சந்தியில் சந்தித்தோம் எம் குருவின் வாகனம்
திருவிழா திருப்பலி தொடங்க முன் வந்து விட்ட நிம்மதி
இன்றுவரை சந்தியோகுமையோரின் பக்திக்கு ஓர் சான்றிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் சம்பளத்துடன் மெழுகுதிரிப் பெட்டியொன்று வரும்
மறுநாள் திருத்தலத்தில் என் அப்பா நிற்பார்
அப்படி ஒரு நாள் எம் அப்பா வீடு திரும்பும் போது
நான் புறப்பட்டேன் யாழ் லூர்து மடம் நாடி - சந்தியோகு
மையோரிடம் பிள்ளைக்காக மன்றாடினேன்
சென்று வா என்றார்.

உயர் தரம் முடித்ததும் உன்னை ஆசிரியர் ஆக்குவேன்
இதுவே என் தந்தையின் மன ஆசை
ஆனால் லூர்து கன்னியர் மடம் என்னை
துறவு வாழ்வு நோக்கி ஈர்க்க செய்தது
திணறினார் தந்தை என் அழைத்தல் கூறியபோது
இறைவன் சித்தம் எதிர்க்காது மறுக்காது இடம் தந்தார்
சிறு சிறு விடயங்களில் பிரமாணிக்கம்
என் வாழ்விற்கு மாதிரிகள் விசவாசத்தின் அடி நாதங்கள்.

எம் பெற்றோரின் முன் மாதிரிகள்
பங்கின் சூழலும் சூழ் நிலைகளும்
பங்கு தந்தையரின் அயராத உழைப்பு
இயற்கை அன்னையின் அரவணைப்பு
கள்ளம் கபடம் தெரியாத பிள்ளைப் பருவம்
என் விசுவாசத்தை வளர்த்த காரணிகள்
இன்று என் வாழ்வின் அச்சாணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிப்போகும் அம்மானை இசை வடிவமும், ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானையும்



கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்
ஊடக வருகை விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**இசை கேட்டால் புவி அசைந்தாடும்**

இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் அருளாகும் - கண்ணதாசன் எழுத்தில் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் ரி.எம்.சவுந்தரராஜன் குரலில் சிவாஜி கணேசன் நடிப்பில் 1972 ஆம் ஆண்டு தவப்புதல்வன் படத்தில் அரங்கேறிய இந்த இசை வரிகள் இன்றும் கேட்க இனிமையானவை. இசையைக் கேட்டு மயங்காதோர் யாருமிலர். இசையானது இனம் மதம் மொழி நிறம் கலாச்சாரம் நாடு கண்டம் என அனைத்து எல்லைகளையும் தாண்டி அனைவரையும் கவர்ந்து ஆக்கிரமிக்க வல்லது. தமிழ்ச் சூழலில் வளர்ச்சி பெற்ற இசை தமிழிசை ஆகும்.

தாலாட்டில் இருந்து ஒப்பாரி வரை தமிழர் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இசை ஒரு முக்கிய இடம் பெறுகிறது. தமிழை இயல் இசை நாடகம் என முத்தமிழாகப் பிரித்து இசைக்கு பாரம்பரியமாக முன்னுரிமை தரப்படுகிறது. பண்டைப் பண் இசை - செவ்வியல் தமிழ் இசை - பக்தி இசை - நாட்டார் இசை - திரையிசை - சொல்லிசை என தமிழிசையின் வடிவங்கள் பல வகைப்படுத்தப்படுகிறது. அருகிப்போகும் அம்மானை இசை வடிவமும் ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானையும் ஒரு நோக்கு என்னும் இந்த ஆய்வில் அம்மானை பற்றிய பொதுவான தகவல்களும் தரவுகளும் ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானை பற்றிய விடயங்களும் விபரங்களும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழில் உள்ள 96 பிரபந்த இலக்கிய வடிவங்களில் ஒன்றான அம்மானை ஒரு நாட்டார் இலக்கிய வடிவமாகும். அம்மானை என்பது விளையாட்டோடு இணைந்த ஒரு இசை வடிவம் அம்மானை என்பது மூன்று பெண்கள் சேர்ந்து ஆடும் ஒரு கல் விளையாட்டு ஆகும். மூன்று பெண்கள் அமர்ந்து கொண்டு கற்களால் செய்யப்பட்ட ஒருவிதமான காயை வீசிப் பிடித்து அம்மானை விளையாட்டை விளையாடுவார்கள். அம்மானைக் காய்கள் எனப்படும் மரத்தால் ஆன வண்ணம் இடப்பட்ட சிறு உருண்டைகளை மேலே எறிந்து அவை கீழே விழும்போது அவற்றில் ஒன்றைக் கழித்து அல்லது கூட்டிப் பிடிப்பதாக அமைந்த விளையாட்டு இதுவாகும்.

இலக்கியத்தில் இருபது முதல் இருபத்தைந்து வயது வரை உள்ள பெண்களுக்குரிய விளையாட்டாக அம்மானை விளையாட்டு காணப்படுகிறது. அம்மானை விளையாட்டை விளையாடும் போது பாடப்படுவதற்கென உருவாக்கப்பட்ட பாடல்களே அம்மானைப் பாடல்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்காலத்தில் கிராமங்களில் மூன்று கல், ஐந்து கல் என்று கற்களைத் தூக்கிப் போட்டுப் பிடித்து பெண்கள் ஆடும் ஆட்டம் நடைபெற்று வந்தது. மூன்று பேர் சேர்ந்து இதனை விளையாடுவதாலும் அம்மானைப் பாடலை மூன்றுபேரும் சேர்ந்து மாறி மாறிப் பாடுவதாலும் இது மூவர் அம்மானை என்றும் அழைக்கப்படுகிறது.

அம்மானை ஆட்டம் என்பது மூன்று பெண்களால் மட்டுமே ஆடப்படும் விளையாட்டு அல்ல. மாறாக இரண்டு பேரோ அல்லது ஒருவரோ கூட அம்மானைக் காய்களைத் தூக்கிப் போட்டுப் பிடித்து அம்மானைப் பாட்டை பாடி விளையாட்டை ஆடலாம். பழங்காலத்தில் இந்த விளையாட்டை ஆடும் போது இலக்கிய நயம் ததும்பும் பாடல்களைப் பாடி விளையாடியதால் அந்தப் பாடல்கள் அம்மானை எனப் பெயர் பெற்றது. இவ்விளையாட்டு அம்மானை விளையாட்டு எனப் பெயர் பெற்றது.

இரண்டு இரண்டு வரிகள் கொண்டதாக ஆறு வரிப்பாடலாக முழுமையாக அமையும் இப்பாடலின் ஒவ்வொரு இரண்டு வரியின் இறுதியிலும் அம்மானை என்ற சொல் இருக்கும். இந்த அம்மானை என்ற சொல் எனது பாடல் முடிந்து விட்டது அடுத்தவர் தன் பாடலை ஆரம்பிக்கலாம் என்ற அறிவிப்பைத்த தருவதாக அமையும். அம்மானை என்ற சொல்லுடன் இப்பாடலின் இரண்டு இரண்டு வரிகள் முடிவதாலும் இது அம்மானை என அழைக்கப்படுகிறது என்றும் எடுக்கலாம். இது வெறும் விளையாட்டாகவே இருப்பினும் ஆடுவதற்கும் அதன் வேகத்திற்கும் ஏற்ப பொருத்தமாகப் பாடல்களை இப்பெண்கள் அழகுறப் புனைந்து அல்லது மனனம் செய்து பாடுவார்கள். யார் சாமர்த்தியமாகக் கேள்வி கேட்பது, யார் சமயோசிதமாக விடை தருவது, யார் விடையில் இரு பொருள் பொதிந்து கூறுவது என்பதில் இவர்களுக்குள் போட்டி நிலவும்.

மாணிக்கவாசகர் திருவாம்மானை என்ற பத்துப் பாடல்களில் சிவபெருமானைப் பற்றிப் பாடியுள்ளார். இதில் மூன்று பெண்கள் பாடுவதுபோல் இல்லாமல் வினா விடையும் இல்லாமல் ஒரு பெண் மட்டுமே இவ்விளையாட்டை விளையாடி அம்மானை என்று முடிப்பது போலும் அமைத்திருப்பார். இந்த வினாக்களும் அவற்றிற்குண்டான விடைகளும் அம்மானையை வீசும் சில நொடிகளில் நிகழ வேண்டும். சமயோசித புத்தியும் புராணங்களில் நல்ல தேர்ச்சியும் உள்ள பெண்களால் தான் இவ்வாறு இருபொருள்படப் பாட முடியும். அம்மானையை ஆடுவதற்கென பெயர் பெற்ற புலவர்கள் பாடலெழுதி உள்ளனர்.

அம்மானையை ஆடும்போது கண்ணும் கையும் சிந்தையும் இணைந்து ஒருமுகப்படும் நிலை பெண்ணுக்கு ஏற்படுகிறது. சிந்திக்க வைக்கும் வினாக்களை எழுப்புவதனாலும் சமயோசிதமான விடைகளைக் கூறிப் பாடுவதாலும் வாக்குவன்மை வளர்கிறது. பண்டைய மகளீர் விளையாட்டுகள் அனைத்துமே பொருள்பட அமைந்தவை. அம்மானை என்பது தாய் என்ற பொருளை உடையது. பெண்களைப் பொதுவாக அம்மா என்று அழைப்பதைப் போல அம்மானை என்று அழைப்பதும் இலக்கிய மரபு. வாக்கியத்தின் முடிவில் பெண்ணை விளிக்கும் விதமாக அம்மானை என்பது அமைந்தது. இதுவே அம்மானய் என்றும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மானைப் பாடல் எவ்வாறு பாடப்படுகிறது.

முதல் பெண் ஒரு செய்தியைப் பாட்டாகப் பாடிவிட்டு கற்களை மேலே தூக்கிப் போட்டுப் பிடித்து அம்மானை என்று கூறுவாள். அப்பாடல் அரசனைப் பற்றியதாகவோ, இறைவனைப் பற்றியதாகவோ இருக்கும். அவர்களின் புகழைக் கூறி அவர்களின் அருளை அடைய வேண்டும் என்பதே இந்த அம்மானைப் பாடலின் நோக்கமாக இருக்கும். இரண்டாவது பெண் முதல் பெண் சொன்ன செய்திக்குப் பொருத்தமாக ஒரு கேள்விகளைக் கேட்டு விட்டு அம்மானை என்று சொல்லி கற்களை மேலே தூக்கிப் போட்டுப் பிடிப்பாள். மூன்றாவது பெண் அந்த வினாவிற்கு விடை அளித்து அம்மானை என்று சொல்லி கற்களை மேலே தூக்கிப் போட்டுப் பாட்டை முடிப்பாள். இதுவே அம்மானை விளையாடும் முறையாகும்.

திருவெங்கைக் கலம்பகத்து அம்மானைப் பாடல் ஒன்றின் வடிவத்தை நோக்குவோம். திருவெங்கைக் கலம்பகத்தில் பிள்ளைப் பொருமாள் அய்யங்கார் பாடிய அம்மானைப் பாடலை எடுத்து இப்பாடல் எவ்வாறு மூன்று பெண்களாலும் பாட அமைக்கப்பட்டது என நோக்குவோம்.

முதற்பெண் ஒரு பொதுச் செய்தியாக முதற்பாட்டை இவ்வாறு தொடங்குவாள்.

**தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளு**
**மானவர் தாம் ஆண்பெண் அலியலர் காணம்மானை**

அதாவது வண்டுகள் விரும்பும் சோலைகள் சூழ்ந்த திருவரங்கநாதர் எல்லாப் பொருளாகவும் திகழ்வாராயினும் ஆணும் பெண்ணும் அலியும் அல்லர் அம்மானை என்பதே இதன் பொருளாகும்.

முதற்பாட்டை தொடர்ந்து இரண்டாவது பெண் வினா வகையில் அமைந்த தன் பாடலை இவ்வாறு பாடுவாள்.

**ஆனவர் தாம் ஆண் பெண் அலியலரே யாமாகில்**
**சானகியை கொள்வரோ தாரமாய் அம்மானை?**

அதாவது அவ்வாறான திருவரங்கர் ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரேயானால் சீதையை மணந்தது ஏன்? என்பதே இதன் பொருளாகும்.

இரண்டாவது பாடலைத் தொடர்ந்து மூன்றாவது பெண் விடை தரும்வகையில் அமைந்த தன் பாடலை இவ்வாறு பாடுவாள்.

**தாரமாய் கொண்டது மோர் சாபத்தாலம்மானை**
**சீதையை மணந்ததும் ஒரு சாபத்தால் அம்மானை**

அதாவது முனிவர் சாபத்தால் சிவபிரானது வில்லால் என்னும் அருபொருள் பட விடை கூறினாள் என்பதே இதன் பொருளாகும்.

பெரும்பாலும் அம்மானைக் காய்கள் மரக் கட்டைகளால் ஆனவை. அவை உருண்டையாய் இருக்கும். வெவ்வேறு நிறம் தீட்டப்பட்டு இருக்கும். கனமில்லாத மரக்கட்டைகளால் செய்யப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இலக்கியத்தில் வெவ்வேறு அம்மானைக் காய்கள் பற்றி தெரிவிக்கப்படுகிறது. முத்து, மாணிக்கம், மரகதம், நீலம் பவளம் ஆகிய மாணிக்கங்களைப் பதித்த அம்மானைகளையும், பொன்னாலும் பளிங்கினாலும் செய்த அம்மானைகளையும் ஆடுவதாக பிள்ளை தமிழ்கள் கூறுகின்றன. அம்மானை அம்மனையென்றும் கூறப்படுகிறது.

உலாக்களிலும் அம்மானை விளையாட்டைப் பற்றிய செய்திகள் உண்டு. அம்மானை ஆடும் போது மகளீர் பாடும் பாடல் வரி என்றும் வழங்கப்படுகிறது. தொழில் செய்வோரும் விளையாடுவோரும் நாடோடிப் பாடல்களை வரிப்பாடல்கள் என்று சொல்லுவார்கள். அந்த வகையில் அம்மானைப்பாட்டுக்கு அம்மானை வரி என்றும் பெயர் வந்தது. மகளீர் விளையாடும் விளையாடல்கள் பல இந்த பல்வரிக்கூட்டத்தை சேர்ந்தவை. அம்மானையும் பல்வரிக்கூத்து வகையில் ஒன்று. நாடோடியாக வழங்கும் அம்மானைப்பாட்டே இயற்கையான அம்மானை வரியாகும். அதன் அமைப்பை பின்பற்றி புலவர்கள் இலக்கியங்களிலும் அம்மானைப் பாடல்களை அமைத்தார்கள். அத்தகைய அம்மானை வரிகளில் இப்போது கிடைப்பவற்றில் பழைமையானது சிலப்பதிகாரத்தில் உள்ள அம்மானை வரியாகும்.

சிலப்பதிகாரத்தில் அம்மானை பாடலை பதிவு செய்த இளங்கோவடிகள் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் அம்மானை முதன் முதலாக இலக்கிய வடிவம் பெற்றது. நாட்டார் வாய்மொழி இலக்கியத்தை முதன் முதலில் இலக்கியத்தில் பதிவு செய்த இளங்கோவடிகளே அம்மானையையும் சிலப்பதிகாரத்தில் பதிவு செய்துள்ளார். சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் கதையில் அம்மானை வரி என்ற பகுதியில் நான்கு பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்களில் சோழ மன்னர்கள் மனுநீதிச் சோழன், கரிகால சோழன், சிபி மன்னன், தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் ஆகியோரின் அருஞ்செயல்களைப் பாடி அவர்களை அடைய வேண்டும் என்று மூவர் சோழர்களின் தலைநகரான பூம்புகார் நகரைப் பாடுவதாக அமைந்துள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதலாவது அம்மானை சந்தியோகுமையோர் அம்மானை 17ஆம் நூற்றாண்டில் இலங்கையை போர்த்துக்கீசர் ஆட்சி செய்த காலத்தில் கத்தோலிக்க தமிழ் இலக்கியங்கள் பல ஆக்கப்பெற்று இருப்பினும் அவற்றில் பல அச்சுவாகனம் ஏறாமல், கிடைக்காமல் போய் விட்டன. இருப்பினும் சந்தியோகுமையோர் அம்மானை, ஞானப்பள்ளு, திருச்செல்வர் காவியம், திருச்செல்வர் அம்மானை ஆகிய நான்கு இலக்கிய நூல்களும் கிடைக்கப் பெற்று அச்சேற்றப்பட்டன.

கத்தோலிக்கம் தென் இந்தியா மற்றும் இலங்கைக்கு பரவுவதற்கு முன்னர் இந்து சமயத்தில் பல அம்மானைகள் தோன்றி இருந்தன. இந்துக்களில் பலர் மதம்மாறி கத்தோலிக்கத்தை தழுவிய பின்னர் தாம் முன்னர் பாடிய அம்மானைப் பாடல்களை பாட முடியாது என்பதாலும் மதம் மாறியவர்களுக்கு கத்தோலிக்க மதத்தின் கொள்ளைகள் கோட்பாடுகள் நெறிமுறைகள் என்பவற்றை கற்பிப்பதற்காகவும் கத்தோலிக்க அம்மானைகள் தோற்றம் பெற்றன. இன்று இந்தியாவிலும், ஈழத்திலும் 70 வரையிலான கத்தோலிக்க அம்மானைகள் உள்ளன என அறிய வருகிறது. மேற்கூறிய நான்கு நூல்களுள் முதலாவதாகிய சந்தியோகுமையோர் அம்மானை அதன் பொதுப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளபடி தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுரு புலவர் அவர்களால் 1647 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மனந்திரும்பிக் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியவர்களுள் ஒருவராகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதுரு புலவர் தெல்லிப்பளையில் சமயத் திருப்பணியாற்றிய சுவாங்கறுவாலு சுவாமியாருடைய வழிகாட்டுதலிலும், மதுரையில் இருந்து கிடைக்கப்பெற்ற அகவற்பாக்களின் துணை கொண்டும் சந்தியோகுமையோர் அம்மானையை இயற்றினார்.

சந்தியோகுமையோர் அம்மானை பற்றிய விபரம். சந்தியோகுமையோர் அம்மானை அர்ச். யாகப்பர் அம்மானை அல்லது அதன் காவியத்தலைவன் புனித ஜேம்ஸ் என்ற பெயர்கள் எல்லாம் ஒருவரையே குறித்து நிற்கின்றன. இவ்வாய்வில் சந்தியோகுமையோர் அம்மானை என்ற பெயரே பயன்படுத்தப்படும்.

சந்தியோகுமையோர் அம்மானை யாழ்ப்பாணம் பச்சிலைப்பள்ளி கிளாலியிலுள்ள கத்தோலிக்க சந்தியோகுமையோர் ஆலயத்தை சிறப்பித்துப் பாடப்பட்டது. இது விருத்தப்பாவால் ஆனது. இதில் 53 பகுதிகள் உள்ளன. கிளாலி கோவிலில் வருடாவருடம் திருவிழாவின் பின்னர் பாடி வந்த மரபில் வந்ததே பிற்காலத்தில் அம்மானை வடிவமாக தோற்றம் பெற்றது.

இஸ்ப்பானியருக்கும், இஸ்லாம் சமயத்தினருக்கும் இடையே நடந்த போர் பற்றியே சந்தியோகுமையோர் அம்மானை கூறுகின்றது. இஸ்ப்பானியருக்கும், இஸ்லாம் சமயத்தினருக்கும் இடையே நடந்த போரில் புனித ஜேம்ஸ் வெண்புரவி வீரராக (குதிரை வீரர்) தோன்றி இஸ்லாம் சமயத்தினரை தோற்கடித்த வரலாற்றை கூறுகின்றது. இந்நூலின் 2 ஆம் பாகத்தில் கடைசி 14 பாடல்களும் இவற்றை விளக்குகின்றது.

சந்தியோகுமையோர் எனப் பெயர் வழங்கும் அர்ச். யாகப்பர் அம்மானையின் சிறப்புப் பாயிரத்தில் சந்தியோகுமையோர் ஆலயத்தைப் பற்றி பின்வருமாறு கூறப்படுகின்றது.

.......வாம்பரிமேலேறி மகிமைச்சுவடணிந்து
நாம்பணியநீதி நடத்துசந்தியோகுவுக்கு
எச்சரிக்கையாக விலங்கிய யாழ்ப்பாணமதில்
பச்சிலைப்பள்ளியெனும் பற்றிற்கிழாலியிலே
கொம்பாஞ்யதேயேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
நம்பிச்சமைத்துவைத்த நல்லாயத்திலிருந்து
ஆருந்தமைத்தேடித் அஞ்சலிக்கவாறவர்க்குத்
தேறுமனந்தநவஞ் செய்தேயிருப்பதுமெய்....

இயேசுசபைக் குருமார் பச்சிலைப்பள்ளி பற்றில் உள்ள கிளாலியில் மறைப்பணியாற்றி அங்கு அப்போஸ்தலரான புனித பெரிய யாகப்பர் ஆலயத்தைக் கட்டுவித்தனர். இவ்வாலயம் கிளாலியின் கடற்கரையோரத்து வயல் வெளியில் அமைந்து காணப்படுகின்றது. இவ்வாலயமானது புதிதாக அழகுறக் கட்டி எழுப்பப்பட்டு 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளாலி சந்தியோகுமையோர் ஆலயத்தில் யூலை மாதம் 25ஆம் திகதி திருவிழா நடைபெறுவது வழமையாகும். அக்காலத்தில் அவ்வாலயத்துக்கு திருவிழாக் கொண்டாட பக்தர்கள் ஆண்டுதோறும் பல ஊர்களில் இருந்து பெருமளவில் சென்றனர். குறிப்பாக அவர்களது நலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி இந்த சந்தியோகுமையோர் அம்மானை இயற்றப்பெற்ற தென்பதை புலவர் அவர்களே நூலில் கூறியுள்ளார். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் இன்றும் ஒவ்வோர் ஆண்டும் யூலை மாதம் 25ஆம் திகதி திருவிழாவின் பின்னர் சந்தியோகுமையோர் அம்மானை பாடப்படுகிறது என்பதாகும்.

முன்னர் மூன்று தடவைகள் பதிப்பிக்கப்பெற்ற சந்தியோகுமையோர் அம்மானை ஜனவரி 1991 அன்று அப்போதைய யாழ் ஆயர் மேதகு கலாநிதி வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டகையின் அனுமதியுடன் திருத்திய பதிப்பாக யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த சந்தியோகுமையோர் அம்மானை 2021ஆம் ஆண்டு யூலை திருவிழாவின் போது செபஸ்தியாம்பிள்ளை பாலதாஸ் கல்யாணி தம்பதியினரால் மறுபதிப்பு செய்யப்படுகிறது என்பது விசேட தகவலாகும்.

**அம்மானையின் இன்றைய நிலை**

அம்மானை என்னும் செய்யுள்வகை சிலப்பதிகாரத்தில் பிறந்து மணிவாசகரின் திருவம்மானையில் தவழ்ந்து சிற்றிலக்கியம் மற்றும் பிரபந்தங்களில் முழு வளர்ச்சியுற்று அண்மைக்கால அம்மானைக் கதைப் பாட்டுக்களைத் தன் குழந்தைகளாகப் பெற்றுள்ளது எனப்படுகிறது. அம்மானை என்ற இசைவடிவம் பாரம்பரிய பழைய இசைவடிவம். இந்த இசைவடிவம் பரம்பரை வாழ்வு கிராமிய அமைப்பு கூட்டுக் குடும்பம் என்பன எல்லாம் மிக இறுக்கமாகவும் மிக நுணுக்கமாகவும் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு காலத்தில் சிறப்பாக இருந்தது. ஆனால் இன்று ஒரு பாரிய பாரம்பரை இடைவெளி ஒன்று தோன்றியுள்ளது. அம்மானை என்ற இசை வடிவம் இன்று அருகிப்போய் வருவது வேதனைக்குரியதாகும். இன்றைய நவீன தொழில் நுட்ப வசதிகள் அதற்கு துணை போகும் நவீன நுட்பமான கருவிகள் இவை இரண்டும் இணைந்த வேக செயற்பாடுகள் இவற்றை பயன்படுத்தும் ஊடகம் அதன் இன்றைய வளர்ச்சியில் உருவான சமூக வலைத்தளங்கள் என்பன எல்லாம் ஒரு வேகமாற்றத்தை உருவாக்கியுள்ளன.

அம்மானைப் பாடல் என்பது ஒரு விளையாட்டோடு இணைந்த ஒரு இசைவடிவம் என்பது இன்றைய இளைய சமுதாயத்தினர் பெரும்பாலானோருக்கு தெரியாத ஒன்றாகிப் போய் விட்டது. அம்மானை என்றால் என்ன என்பதை இவர்களில் பெரும்பாலானோர் அறியாமலே இருக்கின்றனர்.

நவீன கைத்தொலைபேசி மடிக்கணினி நவீன புகைப்படக்கருவி என்பதே இவர்கள் எண்ணமாகவுள்ளது. சமூக வலைத்தளங்கள் அவர்களை கட்டிப் போட்டு விட்டது. குறுந்தகவல், முகநூல் வைபர் வட்ஸ்அப் ஐஎம்ஓ யூருயூப் காணொளி என இவையே அவர்களின் வாழ்வும் பொழுது போக்குமாய் உள்ளது. அம்மானையை இன்று இயற்றும் அதித வல்லமை பெற்றோர் இல்லாமல் போய் விட்டனர். இன்றைய இளம் எழுத்தாளர்களும் படைப்பாளர்களும் அம்மானையை படிக்கவும் எழுதவும் ஆர்வம் காட்டமுடியாது உள்ளனர். இதனைப் படிப்பதும் புரிவதும் அவர்களுக்கு இலகுவானதாக இல்லை. இந்த நிலையில் இவ்விடயம் பற்றி பொதுமக்களைப் பற்றி கூறவேண்டியதில்லை. இவற்றை விட இலகுவாகப் புரியக் கூடிய புதுக்கவிதை மணிக்கதை, சிறுகதை, குறுநாவல், குறும்படம், காணொளி என்பன தோன்றியுள்ளன. இந்நிலையில் அம்மானை இனியும் தேவையற்றது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அதனை விட அம்மானை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை இலக்கிய வடிவத்தை இனியும் கையாள முடியாது என்பதே உண்மையாகும். இந்த நிலையை ஓரளவு என்றாலும் மாற்ற என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம், இந்து கோவில்களிலும் கத்தோலிக்க ஆலயங்களிலும் திருவிழாக்காலங்களில் உரிய அம்மானைப் பாடல்களைப் பாடுவதை ஒரு முயற்சியாகத் தொடங்கலாம். திருவிழாக்கால விளையாட்டுக்களில் அம்மானை விளையாட்டை கடின பாடல்களை விடுத்து இலகுவான பாடல்களுடன் அல்லது புதிய இலகுவான பாடல்களை அமைத்து பாடவும் ஆடவும் முடியுமா என பரீட்சித்துப் பார்க்கலாம்.

தமிழ் சங்கங்களும் தமிழ் அமைப்புக்களும் அம்மானைப் பாட்டுப் போட்டிகள் மனனப் போட்டிகள் அம்மானை எழுதும் போட்டிகள் என்பவற்றை நடத்தலாம். குறிப்பாக எதிர்காலம் கருதி இளைஞர் சிறுவர்களில் இங்கு கவனம் செலுத்துவது சிறப்பானதாகும். பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அம்மானை போன்ற இசை இலக்கிய வடிவங்களை கல்வித் திட்டத்தில் கட்டாய பாட விடயமாக இணைக்கலாம். சென்னை பல்கலைக்கழகத்தில் வீரமாமுனிவர் எழுதிய கித்தோரி அம்மானை தமிழ் முதுகலைமாணி பட்டதற்கு பாடநூலாக அமைந்திருந்தது. பல நூலகங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் அம்மானை புத்தகங்களை அழியவிடாமல் பாதுகாக்க முயற்சிக்கின்றன. சில இடங்களில் பழைய அம்மானைகள் மறு பதிப்பு செய்யப்படுகிறது என்பன எல்லாம் மகிழ்வான விடயங்கள். எது எப்படி இருப்பினும் அம்மானை இசை வடிவம் அருகிப்போகிறது என்பதில் ஐயமில்லை.

**ஊசாத்துணை நூல்கள்**


- கிறிஸ்தவமும் தமிழ்ப்பண்பாடும் ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளார்.
- சந்தியோகுமையோர் அம்மானை 1991, வளன் கத்தோலிக்க அச்சகம் பாதிப்பாசிரியர் அ.யோண்பிள்ளை.
- அம்மானை பற்றிய இணைய குறிப்புக்கள்.


இந்த ஆய்வு கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளால் 15 மார்கழி 2019 அன்று மதுரையில் "உலக தமிழாராச்சி நிறுவனம் தரமணி சென்னை" நடத்திய **முதலாவது உலக தமிழிசை மாநாடு 2019** இல் "அருகிப்போகும் அம்மானை இசை வடிவமும் ஈழத்தின் முதலாவது சந்தியோகுமையோர் அம்மானையும் ஒரு நோக்கு" என்னும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கம் தெளிக்கும் சுவடுகள்



(சுசிலா யாக்கோப்பு)
**Sr. M. Dilanthi A.C**
Superior, Carmel Convent
Pussellawa.

என்னுயிரே என்னுயிரே ஒற்றுமைக்கு ஒவியமாய்
யாழ் மீட்டும் காவியமாய் பேசும்
கிளாலியாம் என் அன்னை மடியே
உம் பெயர் சொல்ல உள் நாக்கு தித்திக்குதம்மா
விரைந்திடும் என் கால்களுக்கோ
சொர்க்கத்தில் சுவடு பதிக்கும் எண்ணம் வருகுதம்மா.

அர்ச் சந்தியோகுமையோர் அரவணைத்த ஊரினையா
தொன்னூற்றி ஆறில் தொலைத்து விட்டு வன்னி ஓடினோம்
இருபது பன்னிரண்டில் இடம் தேடி மீண்டோம்
எங்கேதான் போச்சோ என்னூர் வளர்த்த தென்னையும்
தேன் மதுர மருத நிலங்களும்
அத்திவார சுவடுகள் மட்டும் அடையாளம் கூறின
உன்னை ஆளரவம் அற்ற காடாக்கி
அகதிகளாய் ஓடினோம்.

இருபது இருபதில் அகவை நானூற்றில் பத்து கடக்கவுள்ள
யாத்திரை தலமிருக்க நாளெல்லாம் திருப்பலி யிருக்க
திருநாள் என்று வந்தாலே ஊர் கூடி தேரிழுக்க
வயல் நிலமெல்லாம் கடைகள் பூத்திருக்க
அந்த நவநாட்கள் ஊர் சிரிக்க உறவு சிரிக்க
அப்பா கையருளும் பணப் பரிசில்
கடையெல்லாம் சுற்றி வரும் சொர்க்க மகிழ்ச்சியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிக்கு போன சனம் வந்து பார்த்தோம்
ஏரிக்கரை காற்றில் சுகந்தமில்லை
வான் முட்டிய தென்னந் தோப்பின் தடமுமில்லை
ஆடில்லை மாடில்லை வயலில்லை
ஐயா சந்தியாகப்பரே பார்த்த நீர் சொல்லாயோ.

சொத்து சொந்தம் இறுதியில் எம் தந்தை யாவும் இழந்தோம்
நாட்டின் கொடுமையது
உடல் நலக் குறைவு எம் தந்தைக்கு
நலமிழந்து உயிரிழக்கும் வேளையிலும்
கூவியழைத்த பெயர் உமதல்லவா
சந்தியோகுமையோரே முடியவில்லை கிளாலி தலத்திற்கு
தூக்கி சென்றோம் எம் தந்தையை
யாழில் உம் ஸ்தலத்திற்கு
அமைதியாக உற்றுப் பார்த்தார் உம்மை.

மாதமொன்று கழிந்து எம் தந்தையின்
உயிர் பிரியும் முதல் நாள் அது
கிளாலி சந்தியோகுமையோர் என்று கூவ
துடித்தோம் துவண்டோம் முடியவில்லை எம்மால்
உமதண்டை ஓடி வர
உமது பக்தனாய் வாழ்ந்த மாற்கு யாக்கோப்பின்
பிள்ளைகள் யாம் ......
சமர்ப்பணம் ஆக்குகின்றோம் இக் கவி
சரணடைந்த எம் தந்தைக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையும் அதன் பயன்பாடுகளும்



திருமதி. G.P.பவுலீனா
யாழ் பல்கலைக்கழகம்,
வவுனியா வளாகம்

புனித யாகப்பர் ஆலயமும் அதன் சூழலுக்கு உட்பட்ட பகுதிகளில் முக்கிய இடம் பிடித்து நிற்கும் பனை மரங்கள் பற்றி இயற்கையோடு ஒப்பிட்டு பார்த்து இக்கட்டுரை வரையப்படுகின்றது.

தெற்கே கடல் நீரேரியும் வடக்கே வயல் நிலமும், தென்னை, பனை சோலையையும் கிழக்கிலும் மேற்கிலும் நிமிர்ந்து நிற்கும் பனைகளுக்கும் மத்தியில் அமைந்திருப்பது யாகப்பர் ஆலயம். இவை இறைவனால் கொடுக்கப்பட்ட இயற்கையின் கொடைகள். இக்கட்டுரையானது பனை மரம் பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் சிலவற்றை உள்ளடக்கி எழுதப்படுகின்றது.

இறைவனால் கிளாலிமண்ணிற்கு இயற்கையாக ஈந்த கொடை பனைமரம். இக் கிராமத்தில் பனம் விதையை நாட்டி பனை உண்டாகிய வரலாறு நான் அறியவில்லை. தற்போது அரசு பனை அபிவிருத்திச்சபை ஊடாக பனம் விதைகளை விலைக்கு பெற்று வெவ்வேறு கிராமங்களுக்கு இலவசமாக விநியோகித்து வீதியோரங்களிலும் கடற்கரையோரங்களிலும் நாட்டி உற்பத்தி செய்யப்படுகின்றது. பனைமரத்தில் இருந்து பழுத்து விழுந்து தானாகவே மண்ணில் முளையூன்றி கிழங்காக மாறி வடலி என்னும் பெயருடன் வெளிவந்து 10 தொடக்கம் 20 ஆண்டுகளில் பெரிய பனை மரமாக காய்த்து பல வழிகளில் மனிதர்களுக்கும் சூழலுக்கும் பயன் கொடுக்கின்றது. பனை மரத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் மரங்களுக்கெல்லாம் அரசன் என்பதுபோல மற்றய எப்பயிர்களுக்கும் தலைவணங்காது நிமிந்து நிற்பதுதான். இதற்கு முக்கிய காரணமாக அமைவது இதன் வேர்கள்தான். விதையில் இருந்து கிழங்கு எப்படி கீழ்நோக்கி செல்கின்றதோ அதேபோல வேர்களும் தொடர்ந்து கீழ்நோக்கி தண்ணீரை நோக்கியே செல்லும். இதனால் எவ்வரட்சிக் காலத்திலும் இதற்கு மழை, தண்ணீர் தேவைப்படுவதில்லை அத்துடன் இப் பனை மரம் சூழல் பிரச்சனையான மண்அரிப்பை தடுப்பதற்கு மிகவும் பொருத்தமான மரமாகும். இப்படியாக பயன்தரும் இப் பனைமரம் எம் கிராமத்திற்கு இறைவன் இலவசமாக தந்த கொடை என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. இதை கிராம மக்களாகிய நாம் உணர்வதில்லை. அத்துடன் கடந்த 1995ம்ஆண்டிற்கும் 2006ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட பாரிய யுத்தத்தினால் கிராமம் உட்பட பச்சிலைப் பள்ளி பிரதேசம் முழுவதும் யுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதுடன் பாரிய பல்குழல் பீரங்கித்தாக்குதலால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை வளம் முற்றாக சேதமாக்கப்பட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசம் முழுவதும் அழிவடைந்ததில் எமது கிளாலிக் கிராமமும் அடங்கும். ஆனால் அதற்கு முன்பு விழுந்த பனம் பழவிதைகள் தானாக முளைத்து வந்ததும் இதன் தனித்துவமான சக்தியாகும். யுத்தத்தினால் வீடுவாசல், தென்னை பனை மற்றும் பயன் தரும் மரமெல்லாம் அழிவடைந்த நிலையில் அடர்ந்த காட்டுக்குள் இப்பனை வடலிகள் அழிவடையாது வளர்ந்து நின்றமை இதன் தனிப்பெரும் சக்தியாகும். இப்போது அவ்வாறு நின்ற வடலிகள் பயன் தரும் நிலையை அடைந்துவிட்டது.

